தினபூமி
thinaboomi.com
கோவை, திங்கள், ஏப்ரல் 28, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



**புதின் மீது டிரம்ப் அதிருப்தி: உக்ரைன் மீது ட்ரோன் தாக்குதல் நடத்த தயார் நிலையில் ரஷ்யா**
...2-ம் பக்கம்

**காலக்கெடு நிறைவு எதிரொலி: பாகிஸ்தானியர்கள் அட்டாரி வழியாக நாடு திரும்பினர்**
...3-ம் பக்கம்

**லக்னோவை வீழ்த்தி தொடர்ச்சியாக மும்பை அணி 5-வது வெற்றி**
...6-ம் பக்கம்





● சென்னையில் நேற்று நடைபெற்ற பாராட்டு விழாவில் கவர்னர் சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்டவிரோதமானது என்று சுப்ரீம் கோர்ட் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத்தந்த சுப்ரீம் கோர்ட்டின் மூத்த வழக்கறிஞர்கள் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் டாக்டர் அபிஷேக் சிங்வி, ராகேஷ் திவேதி, எம்.பி. பி.வில்சன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பித்தார்.

### தமிழ்நாடு அரசுக்கு சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பின் மூலம்

# கூட்டாட்சி இந்தியாவை நாம் உருவாக்குவோம்

## வழக்கறிஞர்களுக்கான பாராட்டு விழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஏப். 28-

**தமிழ்நாடு அரசுக்கு சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பின் மூலம் மாநில சுயாட்சியை பெறுவோம், கூட்டாட்சி இந்தியாவை நாம் உருவாக்குவோம் என்று கவர்னருக்கு எதிரான வழக்கில் தமிழக அரசு சார்பில் வாதாடிய வழக்கறிஞர்களுக்கான பாராட்டு விழாவில்** முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**சிறப்புமிக்க தீர்ப்பு...**

சென்னையில் நடந்த பாராட்டு விழாவில் தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாக்களுக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்தி வைத்திருந்தது சட்ட விரோதமானது என்று சுப்ரீம் கோர்ட் தமிழ்நாடு அரசுக்கு சாதகமாக வழங்கிய வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத் தந்த சுப்ரீம் கோர்ட்டின் மூத்த வழக்கறிஞர்கள் முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் டாக்டர் அபிஷேக் சிங்வி, ராகேஷ் திவேதி, பாராளுமன்ற உறுப்பினர் பி.வில்சன் ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சால்வை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.

**எல்லையில்லா மகிழ்ச்சி**

விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- இந்த விழாவை பாராட்டு விழா என்று சொல்வதைவிட, வெற்றி விழா என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! இந்திய அரசியல் சட்ட வரலாற்றில் எந்த மாநிலமும் எப்போதும் பெற்றிடாத இந்த மாபெரும் வெற்றிக்கு வித்திட்ட வழக்கறிஞர்களைப் பாராட்டி எல்லையில்லாத மகிழ்ச்சியோடு நாமெல்லாம் கூடியிருக்கிறோம்.

**தீர்ப்பு மகத்தான வெற்றி**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை - கவர்னர் என்ற நியமனப் பதவி மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணம் கொண்டு, போட்டி அரசுகளை நடத்த தொல்லைகள் கொடுக்கின்ற காலத்தில், மிக முக்கியமான இந்த தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் வழங்கியிருக்கிறது. சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் பர்த்திவாலா, மகாதேவன் அமர்வு வழங்கிய தீர்ப்பு தமிழ்நாட்டுக்கு மட்டும் கிடைத்த வெற்றி அல்ல; மக்களாட்சிக்கும் - மாநில சட்டமன்றங்களின் உரிமைகளுக்கும் கிடைத்த மகத்தான வெற்றி. கவர்னருக்கும், ஜனாதிபதிக்கும் காலக்கெடு நிர்ணயித்தது மிகப்பெரிய வெற்றி.

**மாபெரும் விடுதலை....**

அரசியல் சாசன பிரிவு 142-ன் கீழ் சுப்ரீம் கோர்ட்டிற்கு உள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாடு அரசின் 10 மசோதாக்களுக்கும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது. இந்த மசோதாக்கள் அனைத்தும் உடனே சட்டமாகி நடைமுறைக்கு வருகிறது என்று நீதியரசர்கள் தீர்ப்பளித்தபோது, ஒட்டுமொத்த இந்திய மாநிலங்களும் தலை நிமிர்ந்து சுப்ரீம் கோர்ட்டிற்கு வணக்கம் செலுத்தியது. மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே இருக்கக்கூடிய அதிகாரப் பகிர்வில் மாநில அரசுகளின் உரிமைகளை எக்காலத்திலும் பாதுகாத்திடும் வரலாற்று சாசனமாக இந்த தீர்ப்பு என்றென்றும் நிலைத்திருக்கும். இன்னும் பெருமையோடு சொல்கிறேன். இது இந்திய மாநிலங்களுக்கு தமிழ்நாடு அரசு சுப்ரீம் கோர்ட்டால் பெற்றுத் தந்திருக்கக்கூடிய மாபெரும் விடுதலை.

**அரசின் பாராட்டுகள்..**

இந்த அரசியல் உரிமையை
(கடைசி பக்கம் பார்க்க)

### யு.பி.எஸ்.சி. தேர்வில் 80-வது இடம் பிடித்து தேர்ச்சி:

# மின்சார வாரியத்தலைவர் மகனுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஏப். 28-

**யு.பி.எஸ்.சி. தேர்வு முடிவில் மின்சார வாரியத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் மகன் அரவிந்த் வெற்றி பெற்றார். அவர் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.**

சிவில் சர்வீசஸ் பதவிக்கான நேர்முகத் தேர்வு முடிவு கடந்த 22-ம் தேதி வெளியானது. இதில் 1,009 பேர் வெற்றி பெற்று இருப்பதாக தேர்வை நடத்திய யு.பி.எஸ்.சி. அதற்கான பட்டியலுடன் வெளியிட்டு இருந்தது. அந்த பட்டியலில் மின்சார வாரியத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனின் மகன் டாக்டர் அரவிந்த் ராதாகிருஷ்ணன் 80-வது இடம் பிடித்தார்.

இதற்கு முன்பு அரவிந்த் ராதாகிருஷ்ணன் கடந்த 2022-ம் ஆண்டு சிவில் சர்வீசஸ் தேர்வில் பங்கேற்று தேர்ச்சி பெற்றோருக்கான பட்டியலில் 361-வது இடத்தை பெற்றாலும், பணியில் சேரவில்லை. இதனைத் தொடர்ந்து 2024-ம் ஆண்டுக்கான இந்த தேர்வில் பங்கேற்று 1,009 பேர் பட்டியலில் 80-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்

இந்த நிலையில், யு.பி.எஸ்.சி. தேர்வில் அகில இந்திய அளவில் 80-வது இடம் பெற்று தேர்ச்சி பெற்ற மின்சார வாரியத்தலைவர் ராதாகிருஷ்ணன் மகன் அரவிந்த் ராதாகிருஷ்ணன் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது ராதாகிருஷ்ணன் அவரது மனைவி உடனிருந்தனர்.

### பஹல்காம் தாக்குதலுக்கு கடும் பதிலடி உறுதி:

# காஷ்மீரின் வளர்ச்சியை எதிரிகள் விரும்பவில்லை

## 'மனதின் குரலில்' பிரதமர் மோடி வேதனை

புதுடெல்லி, ஏப். 28-

**பஹல்காம் தாக்குதலுக்கு கடும் பதிலடி கொடுக்கப்படும் என்று மீண்டும் உறுதிப்பட தெரிவித்துள்ள பிரதமர் மோடி, எதிரிகளுக்கு ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சி பொறுக்கவில்லை என்றும் அவர் 'மனதின் குரலில்' தெரிவித்துள்ளார்.**

காஷ்மீரின் சுற்றுலா தலமான பஹல்காமில் கடந்த 22-ம் தேதி பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர். இந்த கொடூர தாக்குதல் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் மோடி தெரிவித்தார். பயங்கரவாதிகளை தேடிப்பிடித்து தண்டிப்போம் என்று சூளுரைத்தார்.

இந்நிலையில், நேற்று மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "இன்று (நேற்று) நான் உங்களிடம் பேசும்போது என் இதயத்தில் ஒரு ஆழமான வேதனை உள்ளது. கடந்த 22-ம் தேதி அன்று நடந்த பஹல்காம் பயங்கரவாத தாக்குதல் ஒவ்வொரு குடிமகனின் மனதையும் உடைத்து விட்டது. பயங்கரவாத தாக்குதலின் படங்களைப் பார்த்த பிறகு ஒவ்வொரு குடிமகனும் கோபத்தால் கொதிப்பதை நான் புரிந்து கொள்கிறேன். ஒவ்வொரு இந்தியரின் ரத்தம் கொதிக்கிறது.

ஒருவர் எந்த மாநிலத்தில் வாழ்கிறார். எந்த மொழியைப் பேசுகிறார் என்பதைப் பொருட்படுத்தாமல், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அனைவரிடத்திலும் ஆழ்ந்த அனுதாபம் உள்ளது. இந்த தாக்குதல் பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்களின் விரக்தியை பிரதிபலிக்கிறது. இந்த தாக்குதல் தீவிரவாதத்தின் ஆதரவாளர்களின் மன சோர்வையும் அவர்களின் கோழைத்தனத்தையும் வெளிப்படுத்துகிறது.

காஷ்மீரில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உயிரோட்டம் இருந்தது. கட்டுமானப்பணிகள் வரலாற்று வேகத்தில் முன்னேறிக் கொண்டு இருந்தன. ஜனநாயகம் வலுப்பெற்றுக் கொண்டு இருந்தது. மக்களின் வருமானம் உயர்ந்து கொண்டு இருந்தது. இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. இதை நாட்டின் எதிரிகள், ஜம்மு காஷ்மீரின் எதிரிகள் விரும்பவில்லை. பயங்கரவாதிகளும் அவர்களின் எஜமானர்களும் காஷ்மீர் மீண்டும் அழிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதனால்தான் இவ்வளவு பெரிய சதித் திட்டத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தப் போரில், நாட்டின் ஒற்றுமை நமது மிகப்பெரிய பலம் ஆகும். இந்த சவாலை எதிர் கொள்ளும் நமது உறுதியை நாம் வலுப்படுத்த வேண்டும். ஒரு தேசமாக வலுவான உறுதியை நாம் நிரூபிக்க வேண்டும். இந்திய மக்கள் உணரும் கோபம் உலகம் முழுவதும் எதிரொலித்து உள்ளது. இந்த கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலை அனைவரும் கடுமையாக கண்டித்துள்ளனர். உலகத் தலைவர்கள் தொலை பேசியில் என்னிடம் பேசினார்கள். கடிதங்கள் எழுதியுள்ளனர், செய்திகளை அனுப்பி உள்ளனர். பயங்கரவாதத்திற்கு எதிரான நமது போராட்டத்தில் 140 கோடி இந்தியர்களுடன் முழு உலகமும் நிற்கிறது.

தாக்குதலுக்கு எதிராக இந்தியா ஒரே குரலில் பேசுவதை உலகம் கவனித்துக் கொண்டிருக்கிறது. இந்த ஒற்றுமைதான் பயங்கரவாதத்திற்கு எதிரான தீர்க்கமான போரின் மிகப்பெரிய அடித்தளம் ஆகும். பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்கும் என்று மீண்டும் ஒருமுறை நான் உறுதி அளிக்கிறேன். இந்தத் தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டியவர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு கடுமையான பதிலடி கொடுக்கப்படும்" என்று பேசினார்.

### கோவையில் 25 ஆயிரத்து 24 பயனாளிகளுக்கு

# ரூ.239.41 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

## * துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்
## * சர்வதேச தரத்தில் ஹாக்கி மைதானத்திற்கு அடிக்கல்

கோவை, ஏப். 28-

**ரூ.9.67 கோடி மதிப்பில் கோவையில் சர்வதேச தரத்தில் அமையவுள்ள ஹாக்கி மைதானத்திற்கு துணை முதல்வர் உதயநிதி அடிக்கல் நாட்டினார். மேலும், ரூ.239.41 கோடி மதிப்பில் 25 ஆயிரத்து 24 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் அவர் வழங்கினார்.**



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கோவையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் நேற்று பங்கேற்றார். இதற்காக அவர் நேற்று மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையத்திற்கு சென்றார். அவருக்கு, கோவை விமான நிலையத்தில் அமைச்சர் செந்தில்பாலாஜி தலைமையில் மாவட்ட செயலாளர்கள் நா. கார்த்திக், தொண்டாமுத்தூர் ரவி, தளபதி முருகேசன் மற்றும் ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் திரண்டு வந்து வரவேற்றனர். அதனை தொடர்ந்து உதயநிதி காரில் புறப்பட்டு கோவை ஆர்.எஸ். புரத்தில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிக்கு வந்தடைந்தார்.

அங்கு அவரை கலெக்டர் வரவேற்று உள்ளே அழைத்து சென்றார். அதனை தொடர்ந்து மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் கோவை ஆர்.எஸ்.புரத்தில் 6,500 சதுர மீட்டர் பரப்பளவில் ரூ.9.67 கோடி மதிப்பில் சர்வதேச தரத்தில் புல்வெளி தளத்துடன் அமைய உள்ள ஹாக்கி மைதானத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். டர்ப் தளம், மின் கோபுர விளக்குகள், கழிவறை, பார்வையாளர் அரங்கம் உள்ளிட்டவை மைதானத்தில் அமைகின்றன.

பின்னர் அங்கு நடந்து வரும் விழாவில் ரூ.82.14 கோடி மதிப்பில் 132 புதிய திட்டபணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.29.99 கோடி மதிப்பிலான 54 முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். தொடர்ந்து ரூ.239.41 கோடி மதிப்பில் 25 ஆயிரத்து 24 பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளையும் வழங்கினார்.

அதன்பின்னர் விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:- பட்டா என்பது வெறும் ஆவணம் கிடையாது. உங்கள் இடத்தின் மீது உங்களுக்கு இருக்கக்கூடிய சட்டப்பூர்வ உரிமையாகும். உங்களுடைய உரிமையை நம்முடைய திராவிட மாடல் அரசு இன்று நிலைநாட்டியுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்கு என்று நிறைய திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்த்து பார்த்து செய்து கொண்டிருக்கிறார். கடந்த வாரம் கூட இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் அறிவிக்காத, உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் மாற்றுத்திறனாளிகளை தேர்வு செய்வதற்கான சட்டமசோதாவை, சட்டசபையில் முதல்வர் அறிவித்தார்.

இதன் மூலம் 15,000 மாற்றுத்திறனாளிகள் பயனடையவுள்ளனர். திராவிட மாடல் அரசு என்றாலே எல்லாருக்கும் எல்லாம் என்பதுதான் அர்த்தம். சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரின் தேவை அறிந்து செயல்படுவதுதான் திராவிட மாடல் அரசு. மகளிர் உரிமைத்தொகையை கடன் தொகையாக பார்க்காமல், நம்பிக்கை தொகையாக பார்க்கிறோம். இந்த அரசு என்றைக்கும் மக்களுக்கு பக்கபலமாக இருக்கும், நீங்களும் இந்த அரசுக்கு பக்கபலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலத்தில் வசிக்கும்

# 86 ஆயிரம் பேருக்கு பட்டா: தமிழக அரசாணை வெளியீடு

சென்னை, ஏப்.28-

**ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.**


தமிழகத்தில் சென்னை மற்றும் அதன் புறநகர் மாவட்டங்கள், மதுரை, நெல்லை மாநகராட்சிகள் உட்பட பல்வேறு ஊராட்சிகள் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் பல ஆண்டுகாலமாக புறம்போக்கு நிலங்களில் வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் சென்னையைச் சுற்றியுள்ள 4 மாவட்டங்களில் பெல்ட் ஏரியா எனப்படும் 32 கி.மீ. பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து நீண்ட காலமாக குடியிருப்பவர்கள் மற்றும் இதர மாவட்டங்களில் ஆட்சேபகரமற்ற பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவதற்கான தடையை நீக்குவது தொடர்பாக, கடந்த பிப்ரவரி 10-ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டது.


இந்த நிலையில் தற்போது ஆட்சேபகரமற்ற புறம்போக்கு நிலத்தில் வசிக்கும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. மேலும் நில ஒதுக்கீட்டு வரம்புகளையும் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -588.90 | -207.35 |
| பாயின்ட் 79,212.53 | பாயின்ட் 24,039.35 |



**தங்கம்**
1 சவரன் ₹72,040
1 கிராம் ₹9,005



**வெள்ளி**
1 கிலோ ₹112,000
1 கிராம் ₹112.00

**டாலர்** ₹85.37

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

## புதின் மீது டிரம்ப் அதிருப்தி:
# உக்ரைன் மீது ட்ரோன் தாக்குதல் நடத்த தயார் நிலையில் ரஷ்யா..!

**மாஸ்கோ, ஏப். 28-**

உக்ரைன் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



உக்ரைன் மீதான போர் விவகாரத்தில் ரஷ்ய அதிபர் விளாதிமீர் புதின் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அதிருப்தி தெரிவித்த நிலையில், உக்ரைன் மீது தாக்குதல் நடத்த, 150 ட்ரோன்களை ரஷ்யா தயாராக வைத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

வாடிகனில் மறைந்த போப் பிரான்சிஸின் உடல் நல்லடக்கம் மற்றும் இறுதி சடங்கில் உக்ரைன் அதிபர் வோலோதிமிர் ஸெலென்ஸ்கியும் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப்பும் ஒரே நேரத்தில் பங்கேற்றனர். மேலும், போப் இறுதிச்சடங்கில் பங்கேற்க வந்திருந்த இருவரும் நெடுநேரம் பேசிக் கொண்டனர்.

இந்த சந்திப்பைத் தொடர்ந்து, தமது 'ட்ரூத் சோஷியல்' சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள டிரம்ப், உக்ரைனில் நீடிக்கும் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதில் புதினுக்கு விருப்பம் இருக்கிறதா? இல்லையா? என்ற சந்தேகம் எழுகிறது. பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் நகரங்கள் மீது ரஷ்யா ஏவுகணைகளை வீசுவதற்கு எந்தக் காரணமும் இல்லை.

உக்ரைன் நகரங்கள் மீதான ரஷ்யாவின் தாக்குதல்களைப் பார்த்தால், போரை நிறுத்த புதின் விரும்பவில்லை என்றும், அவர் என்னை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார் என்றும் கூட தோன்றுகிறது என்று தெரிவித்தார்.

மேலும், ரஷ்யா மீது பொருளாதாரத் தடை கடுமையாக்கப்படும் என்று மறைமுகமாக எச்சரிக்கை விடுத்தார் டிரம்ப்.

## ஈரான் துறைமுக வெடிவிபத்து உயிரிழப்பு 14 ஆக அதிகரிப்பு..!

**தெஹ்ரான், ஏப். 28-**

ஈரான் நாட்டில் அமைந்துள்ள பந்தர் அப்பாஸ் பகுதியில் உள்ள ஷாஹித் ராஜாயி துறைமுகத்தில் சனிக்கிழமை (ஏப்.26) ஏற்பட்ட சக்திவாய்ந்த வெடிவிபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. இதில் 750-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இந்த தகவலை ஈரான் நாட்டின் அரசு செய்தி நிறுவனமான ஐஆர்என்ஏ உறுதி செய்துள்ளது.

ஈரான் தலைநகரில் தெஹ்ரானில் இருந்து சுமார் 1,000 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இந்த துறைமுகத்தில் வெடிவிபத்து ஏற்பட்டதும் வான்வழியாக ஹெலிகாப்டர் மூலம் தீயை அணைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஹார்முஸ் ஜலசந்தி அருகே இந்த விபத்து ஏற்பட்டது. உலக அளவிலான எண்ணெய் விநியோக பணியில் இந்த பகுதி முக்கியமானதாக உள்ளது.

துறைமுகத்தில் இருந்த ரசாயனங்களை மிகவும் மோசமான முறையில் பராமரிப்பின்றி அலட்சியமாக கிடங்குகளில் வைத்திருந்ததுதான் காரணம் என்கிறார் ஈரானின் நெருக்கடி மேலாண்மை அமைப்பின் செய்தித் தொடர்பாளரான ஹுசைன் சபாரி. கன்டெய்னர்களுக்குள் வைக்கப்பட்டிருந்த ரசாயனங்கள் தான் இந்த வெடிவிபத்துக்கு காரணமாக அமைந்துள்ளது. இதற்கு முன்பு பாதுகாப்பு அமைப்பு சார்ந்தவர்கள் ஆய்வு நடத்திய போது, இந்த துறைமுகத்தில் இருக்கும் அபாயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன என அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் ஈரான் அரசு தரப்பில் இந்த வெடிவிபத்துக்கான காரணம் இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதே நேரத்தில் ரசாயனங்கள் இந்த விபத்துக்கு காரணமாக அமைத்திருக்க வாய்ப்புகள் இருப்பதாகவும் அரசு தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து உரிய விசாரணை மேற்கொள்ள ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், சம்பவ இடத்துக்கு அமைச்சர் ஒருவரையும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.



கோவையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நேற்று வருகை தந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு ஆர்.எஸ்.புரத்தில் மக்கள் திரளாக வந்து வரவேற்பு அளித்தனர்.

# சென்னையில் சாலை விபத்து உயிரிழப்பு தற்போது குறைவு
## காவல் ஆணையர் அருண் தகவல்

**சென்னை, ஏப். 28-**

போக்குவரத்து போலீஸாரின் தொடர் நடவடிக்கைகளால் சென்னையில் விபத்து உயிரிழப்புகள் 14 சதவீதம் குறைந்துள்ளதாக சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக காவல் ஆணையர் அருண் வெளியிட்ட செய்திக்குறிப்பு: 'விபத்து, விபத்து உயிரிழப்பு மற்றும் போக்குவரத்து நெரிசலை குறைக்க சென்னை போக்குவரத்து போலீஸார் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதுமட்டும் அல்லாமல் நிபுணர்களுடன் ஒருங்கிணைந்து, விபத்துக்களைக் குறைப்பதற்கான தொழில்நுட்பங்கள் குறித்து போக்குவரத்து போலீஸாருக்கு முறையான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

பள்ளி குழந்தைகள், பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் டெலிவரி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு சாலை பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டும் அல்லாமல் வேகமாக வாகனம் ஓட்டுதல், ஹெல்மெட் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டுவது, பயணிப்பது, காரில் சீட் பெல்ட் அணியாமல் கார் ஓட்டுவது உள்பட போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடுவோருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது.

மேலும், சாலை நிலவரங்கள், அறிவிப்பு பலகைகள் மற்றும் ஒளிரும் விளக்குகள் போன்றவற்றை நகரின் முக்கிய இடங்களில் போக்குவரத்து போலீஸார் வைத்துள்ளனர். இதன் மூலம் வாகன ஓட்டிகள் விபத்து ஏற்படக்கூடிய இடங்களை எளிதில் அடையாளம் கண்டறிந்து வாகனங்களை கவனமுடன் இயக்குகின்றனர். இது போன்று போக்குவரத்து போலீஸாரின் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சென்னை பெருநகரில் கடந்த ஆண்டை விட விபத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் கணிசமாகக் குறைத்துள்ளது.

இது கடந்த ஆண்டுடன் (2024) ஒப்பிடும்போது, 25.04.2025 நிலவரப்படி 2025-ம் ஆண்டில் இறப்புகள் 14 சதவீதம் குறைந்துள்ளது. கடந்த ஆண்டு 25.04.2024 வரை 173 உயிரிழப்புகள் நடந்துள்ளது. இந்தாண்டு இது வரை 149 உயிரிழப்புகளே நடந்துள்ளது. விபத்துகளைக் குறைப்பதற்கும், சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார்

## பஹல்காம் தாக்குதல் குறித்து கேட்டறிந்தார்:
# பிரதமர் மோடியுடன் ஈரான் அதிபர் தொலைபேசியில் உரையாடல்

**புதுடில்லி, ஏப்.28-**

பஹல்காம் தாக்குதல்: பிரதமர் மோடியுடன் தொலைபேசியில் உரையாடிய ஈரான் அதிபர் தனது ஆதரவை தெரிவித்தார்.

காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் 26 பேரை பாகிஸ்தான் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர். இத்தாக்குதலுக்கு அமெரிக்கா உள்பட பல்வேறு நாடுகள் மற்றும் ஐ.நா. சபை கண்டனம் தெரிவித்துள்ளன. பிரதமர் மோடியுடன் அமெரிக்க அதிபர் டிரம்ப் தொலைபேசியில் பேசி ஆதரவு தெரிவித்தார்.

இந்நிலையில் பிரதமர் மோடியுடன் ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியன் தொலைபேசியில் பேசினார். அப்போது இது போன்ற மனிதாபிமானமற்ற பயங்கரவாதச் செயல்களை திட்டவட்டமாக ஈரான் கண்டிக்கிறது என்று தெரிவித்த பெஷேஷ்கியன், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு பிராந்திய ஒத்துழைப்பின் அவசியத்தை வலியுறுத்தினார்.



மேலும் இந்த துயர சம்பவங்கள் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளின் பொறுப்பை அதிகரிக்கின்றன. பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு நீடித்த அமைதியை உறுதிசெய்து ஒற்றுமை மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பு மூலம் பயங்கரவாதத்தின் வேர்களை அழிக்க பிராந்திய அரசுகளை கட்டாயப்படுத்துகின்றன என்று தெரிவித்தார்.

இதற்கிடையே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான், பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பகல்காம் பயங்கரவாத தாக்குதலை கடுமையாகக் கண்டிப்பதாக தெரிவித்தார்.

## விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல்: கனடா நாட்டை சேர்ந்தவர் கைது

**வாராணாசி, ஏப். 28-**

வாராணாசி விமான நிலையத்தில் இண்டிகோ விமானத்தில் இருந்த பயணி ஒருவர் வெடிகுண்டு வைத்திருந்ததாகக் கூறி பரபரப்பை கிளப்பினார்.

உத்தரப் பிரதேச மாநிலம், வாராணசி விமான நிலையத்தில் இருந்து வாராணசி-பெங்களூரு இண்டிகோ விமானம் சனிக்கிழமை இரவு புறப்பட தயாராக இருந்தது. அப்போது விமானத்தில் இருந்த வெளிநாட்டு பயணி ஒருவர் வெடிகுண்டு வைத்திருந்ததாகக் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

வெடிகுண்டு மிரட்டலைத் தொடர்ந்து, விமானம் முழுமையான ஆய்வுக்காக உடனே தனிமைப்படுத்தப்பட்டது. ஆனால் வெடிக்கும் பொருள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று விமான நிலைய இயக்குநர் புனீத் குப்தா தெரிவித்தார். இதுதொடர்பாக கனடா நாட்டைச் சேர்ந்த பயணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபரை பாதுகாப்பு அதிகாரிகள் விசாரித்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பாதுகாப்பு நிறுவனங்களிடமிருந்து அனுமதி பெற்ற பிறகு, விமானம் ஞாயிற்றுக்கிழமை காலை பெங்களூரு புறப்பட்டது. இதனால் வாராணசி விமான நிலையத்தில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## இந்தியா உடனான வர்த்தக முறிவு எதிரொலி:
# மருந்து பொருட்களுக்கு பாகிஸ்தானில் தட்டுப்பாடு?

**இஸ்லாமாபாத், ஏப். 28-**

பஹல்காம் தீவிரவாத தாக்குதலையடுத்து தீவிரவாதத்துக்கு புகலிடம் அளிக்கும் பாகிஸ்தானை வழிக்கு கொண்டுவர, சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட 5 முக்கிய முடிவுகளை இந்திய அரசு எடுத்தது. இந்தியாவின் இந்த நடவடிக்கைக்கு எதிர்வினையாற்றும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை பாகிஸ்தான் அரசு எடுத்துள்ளது. அதில் ஒன்று இந்தியா உடனான அனைத்து விதமான வர்த்தகத்தையும் நிறுத்துவது தொடர்பான அறிவிப்பு. இதனால் அந்த நாட்டில் மருந்து விநியோக சங்கிலி பெரிய அளவில் பாதிக்கப்படும் சூழல் உருவாகி உள்ளது.

ஏனெனில், அந்த நாட்டின் மருந்து தேவையில் சுமார் 30 முதல் 40 சதவிதம் வரையில் இந்தியாவை நம்பியே உள்ளது. குறிப்பாக மருந்து சார்ந்த மூலப்பொருட்கள் மற்றும் பல்வேறு மேம்பட்ட சிகிச்சை பொருட்களும் இதில் அடங்கும். இந்நிலையில், மருந்து மற்றும் மருத்துவ பொருட்களை பெற அவசரகால தயார்நிலை சார்ந்த நடவடிக்கையை அந்த நாட்டு சுகாதாரத்துறை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நடவடிக்கையின் மூலம் மருந்து விநியோக சங்கிலியை உறுதி செய்ய சுகாதாரத்துறை அதிகாரிகள் முயற்சித்து வருவதாக அந்த நாட்டு ஊடகம் தெரிவித்துள்ளது. இது குறித்து முறையான அறிவிப்பு எதுவும் இல்லை என்றாலும் அவசரகால நடவடிக்கைகள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளதாக பாகிஸ்தான் நாட்டின் மருந்து ஒழுங்குமுறை ஆணையம் உறுதி செய்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

2019-ல் ஏற்பட்ட நெருக்கடிக்கு பிறகு இது மாதிரியான சூழலை எதிர்கொள்ள தங்கள் தரப்பு எப்போதும் தயார் நிலையில் இருந்து வருவதாக பாகிஸ்தான் மருந்து ஒழுங்குமுறை ஆணையம் கூறியுள்ளது. அதனால் இப்போது மருந்து தேவைகளை சமாளிக்க மாற்று வழிகளை கண்டறிந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சீனா, ரஷ்யா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் இருந்து தங்களுக்கு தேவையான மருந்துகளை பெறுவதற்கான முயற்சிகளை பாகிஸ்தான் தொடங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் கள்ளச்சந்தையில் தரமற்ற மருந்துகள் அண்டை நாடுகளில் இருந்து கடத்தி வரப்படும் சூழல் உள்ளது.

இந்த நிலையில் இந்தியா உடனான வர்த்தகத் தடையிலிருந்து மருந்து, மாத்திரைகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கக் கோரி இந்த துறை சார்ந்த தலைவர்கள் பாகிஸ்தான் அரசிடம் முறையிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

## பஹல்காம் தாக்குதல்:
# இந்தியாவுக்கு அனைத்து உதவிகளையும் செய்வோம் - எப்.பி.ஐ. தலைவர் உறுதி

**வாஷிங்டன், ஏப். 28-**

பஹல்காம் தாக்குதல் தொடர்பாக இந்தியாவுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்வோம் என்று அமெரிக்க எப்.பி.ஐ. தலைவர் காஷ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் பிரபல சுற்றுலா நகரமான பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22 இல் நடந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் உயிழந்தனர். இந்த தாக்குதலுக்கு லஷ்கர் இ தொய்பாவின் கிளை அமைப்பு பொறுப்பேற்றது. இந்த தாக்குதலுக்கு பின் இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவுகிறது. பல உலக தலைவர்கள் இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தனர்.



இந்நிலையில் இந்தியாவுக்கு அனைத்து உதவிகளையும் செய்வோம் என இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்க எப்.பி.ஐ. இயக்குனர் காஷ் பட்டேல் தெரிவித்துள்ளார். காஷ் பட்டேல் கூறியதாவது, காஷ்மீரில் சமீபத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எப்.பி.ஐ இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. மேலும் இந்திய அரசாங்கத்திற்கு எங்கள் முழு ஆதரவையும் தொடர்ந்து வழங்குவோம். பயங்கரவாதத்தின் தீமைகளால் உலகம் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை இந்த தாக்குதல் நினைவூட்டுகிறது என்றார். ஏற்கனவே இந்தியாவுக்கு ஆதரவு அளிப்பதாக அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குனர் துளசி கப்பார்ட் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

**28-04-2025**




**மேஷம்:-** பல வழிகளிலும் பணம் வந்து மகிழ்ச்சி நிறைந்த நாளாக அமையும். பெண்கள் விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வர். ஆணையிடும் அதிகார பதவி கிடைக்கும்.

**ரிஷபம்:-** அதிக குடும்பச் செலவுகள் காரணமாகக் கையிருப்பு குறையும். உங்கள் உண்மையான உழைப்பு விழலுக்கு இறைத்த நீராகும். நண்பர்களிடம் பகைமை பாராட்டாது இருப்பது நல்லது.

**மிதுனம்:-** பலவழிகளிலும் இலாபம் பெருகும். சுகம், சந்தோஷம், பயணத்தில் உல்லாசம் ஆகியவை ஏற்படும். தனவரவு கூடும். வியாபாரிகளுக்கு தொழில் விருத்தி ஏற்படும்.

**கடகம்:-** தனலாபம் பெருகும். மனைவியின் ஒத்துழைப்பால் மனம் மகிழும். மாணவர்களுக்கு படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர பரிசு திட்டங்களை அறிவிப்பது லாபம் தரும்.

**சிம்மம்:-** புனித யாத்திரைகள் மன மகிழ்ச்சியுடன் சென்று வருவீர்கள். .பல வழிகளிலும் பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். கனிவான பேச்சால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள்.

**கன்னி:-** வீட்டில் ஒற்றுமை இன்மையால் ஒருவிதக் குழப்பம் நிலவும். இஷ்டத்துக்கு மாறாக எல்லாம் நடக்கும். சிலருக்கு கோர்ட் படி ஏற வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்:-** தம்பதிகள் ஒற்றுமையாக இருக்க, குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். பதவி உயர்வு வாகன யோகம் ஏற்படும். தர்ம காரிய ஈடுபாடு வாழ்க்கையில் புதிய திருப்பங்களை ஏற்படுத்தும்.

**விருச்சிகம்:-** பெண்களால் இலாபம் ஏற்படும். பிள்ளைகள் உங்களுக்குப் பெருமை சேர்ப்பர். பிரிந்திருந்த உறவுகள் பேரன்பால் ஒன்று சேரும். எல்லா வகையிலும் சந்தோஷம் அதிகரிக்கும்.

**தனுசு:-** குழந்தைகள் தொல்லை உண்டாகும். நண்பர்களுடன் வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரிகளுக்கு தொழிலில் எதிர்பார்த்த இலாபம் இருக்காது.

**மகரம்:-** வழக்குகளை இன்று தள்ளிப் போடுவது நல்லது. மதிப்பு மிக்க பொருட்கள் பாதுகாப்பை உறுதி படுத்திக் கொள்ளுங்கள். அன்னையின் உடல் நிலையில் மிகுந்த அக்கறை தேவை.

**கும்பம்:-** தொழில் தொடர்பான தூரப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும். எடுத்த காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும். உடன்பிறப்புக்களின் உதவி மனத் தெம்பைத் தரும்.

**மீனம்:-** உறவுகளிடையே வீண் வாக்குவாதங்களை தவிர்த்தால் வீட்டில் நிம்மதி நிலவும். மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்வது அவசியமாகும். தொழிலில் அதிக முதலீடு செய்வதைத் தவிருங்கள்.

# வக்பு நிலங்களில் வளர்ச்சிப்பணிகள்: தமிழ்நாடு வக்பு வாரியம் அனுமதி

**ராமேசுவரம், ஏப்.28-**

வக்பு வாரியத்திற்கு சொந்தமான காலி இடங்களில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள தேவையான அனைத்து அனுமதிகளை வழங்க தயாராக உள்ளதாக தமிழ்நாடு வக்பு வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் நவாஸ்கனி எம்.பி., வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு விவரம் வருமாறு, 'தமிழ்நாடு வக்பு வாரியத்தின் கீழ் இயங்கும் வக்பு நிறுவனங்களின் அனைத்து முத்தவல்லிகளுக்கும் தமிழ்நாடு முழுவதும் வக்பு வாரியத்திற்கு சொந்தமான காலியாக, பயன்படுத்தாமல் உள்ள இடங்களில் சமுதாய மக்கள் பயன்பெறும் வண்ணம் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மதரசாக்கள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு வக்பு வாரியம் அனைத்து அனுமதிகளையும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு வழங்க தயாராக உள்ளது, என அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிவிப்பின் அடிப்படையில், வளர்ச்சிப் பணிகளின் தொடக்கமாக வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு வட்டம் தாஹிர் முகமது கான் மாஸ்க் வக்புவிற்கு பாத்தியப்பட்ட பயன்படுத்தப்படாமல் காலியாக இருந்த 3.11 ஏக்கர் நிலத்தில் பேர்ணாம்பட்டு நகர மற்றும் சுற்றுவட்டார கிராம புறத்தில் உள்ள ஏழை எளிய மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு பேர்ணாம்பட்டு முஸ்லிம் எஜுகேஷன் சொசைட்டி நிர்வாகம் முன் வைத்த கோரிக்கைக்கு தமிழ்நாடு வக்பு வாரியம் அனுமதி வழங்கி உள்ளது. இதன் மூலம் அந்த பகுதி ஏழை எளிய மக்கள் பெரிதும் பயனடைவார்கள்.

இந்த பொறுப்பில் அனைவரும் ஒருங்கிணைந்து சமுதாயம் பயன்படும் வண்ணம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், என செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.' இவ்வாறு நவாஸ்கனி தெரிவித்துள்ளார்.

**மரம் மனிதனின் உரம்**

## கனடா நாட்டில் பயங்கரம்:
# வீதியில் கூடிய கூட்டத்தின் மீது மோதிய கார் - பலர் உயிரிழப்பு

**ஒட்டோவா, ஏப். 28-**

கனடாவின் வான்கூவரில் நேற்று முன்தினம் இரவு நடந்த விழா ஒன்றில் கூட்டத்தில் கார் மோதியதில் பலர் உயிரிழந்துள்ளர், மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்று போலீஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து வான்கூவர் போலீஸார் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், சனிக்கிழமை இரவு 8 மணிக்கு இ.41-வது அவென்யூவில் நடந்த விழா ஒன்றில் கூட்டத்தினர் மீது கார் மோதியதில் சிலர் உயிரிழந்துள்ளனர், பலர் காயமடைந்துள்ளனர். கார் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையின் முடிவில் சம்பவம் குறித்த கூடுதல் தகவல்கள் தெரிவிப்போம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை போலீஸார் இன்னும் உறுதிப்படுத்தவில்லை, இருந்தபோதிலும் சமூக ஊடகங்களில் பரவி வரும் வீடியோக்களில் தெரு முழுவதும் இறந்தவர்களின் உடல்கள் கிடப்பதை பார்க்க முடிகிறது.

கூட்டத்தினர் மீது மோதியதாக கூறப்படும் கருப்பு எஸ்யூவி கார் ஒன்று நொறுங்கிய நிலையில், சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் நீலநிற லாரிக்கு அருகில் நிற்பதைக் காண முடிகிறது.

வேறு சில வீடியோக்களில் காயமடைந்தவர்களுக்கு பிறர் உதவி செய்வதையும் பலர் கதறுவதையும் காணமுடிகிறது.

பிலிப்பினோ பாரம்பரியம் மற்றும் கலாச்சார விழாவைக் கொண்டாடும் லாபு லாபு தின விழாவில் நடந்த இந்த துயரச் சம்பவம் குறித்து வான்கூவர் மேயர் கென் சிம் தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

# கடந்த பத்து ஆண்டுகளில் 300-க்கும் மேற்பட்ட விண்வெளி ஸ்டார்ட்-அப்கள்

## மனதின் குரலில் பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, ஏப்.28-

இந்தியா தனது விண்வெளித் துறையை தனியார் துறைக்கும் திறந்து விட்டதை அடுத்து, கடந்த 10 ஆண்டுகளில் 300-க்கும் மேற்பட்ட விண்வெளி ஸ்டார்ட் அப்புகள் செயலாற்றி வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி மூலம் இது தொடர்பாக பேசிய அவர், "இரண்டு நாட்கள் முன்பாக மகத்தான அறிவியலாளரான டாக்டர். கே. கஸ்தூரிரங்கன் அவர்களை நாம் இழந்துவிட்டோம். விஞ்ஞானம், கல்வி மற்றும் பாரதத்தின் விண்வெளித் திட்டத்தின் புதிய உயரங்களை அளிப்பதில் அவருடைய பங்களிப்பு எப்போதுமே நினைவில் கொள்ளப்படும்.

டாக்டர். கே. கஸ்தூரிரங்கன் அவர்கள் தேசத்தின் புதிய தேசியக் கல்விக்கொள்கையைத் தயாரித்து அளிப்பதிலும் கூட மிகப்பெரிய பங்களிப்பை அளித்திருக்கிறார். டாக்டர். கஸ்தூரிரங்கன், 21ஆம் நூற்றாண்டின் நவீனத் தேவைகளுக்கு ஏற்ப, முன்னோக்குப் பார்வை கொண்ட கல்விச் சிந்தனையை முன்வைத்தார். தன்னலமற்ற தேச சேவை மற்றும் தேச நிர்மாணம் ஆகியவற்றில் அவருடைய பங்களிப்பு என்றும் நினைவில் கொள்ளப்படும். டாக்டர். கே. கஸ்தூரிரங்கன் அவர்களுக்கு பணிவுணர்வோடு நான் சிரம் தாழ்ந்து அஞ்சலி செலுத்துகிறேன்.

இந்த மாதம் ஏப்ரலோடு ஆர்யபட்டா செயற்கைக்கோள் ஏவப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவெய்துகின்றது. இன்று நாம் பின்னோக்கிப் பார்க்கையில், 50 ஆண்டுகளின் இந்தப் பயணத்தை அசைபோடும் போது, நாம் எத்தனை தொலைவு பயணித்திருக்கிறோம் என்பதை உணர முடிகிறது. மாட்டு வண்டிகளிலும், சைக்கிள்களிலும் முக்கியமான கருவிகளைத் தாமே எடுத்துவந்த நமது விஞ்ஞானிகளின் படங்களை நீங்கள் கவனித்திருக்கலாம். அதே ஈடுபாடு மற்றும் தேச சேவையுணர்வின் விளைவாகவே இன்று இத்தனை பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இன்று பாரதம் ஒரு உலக அளவிலான விண்வெளி சக்தி. நாம் ஒரே நேரத்தில் 104 செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவிய சாதனையைப் படைத்திருக்கிறோம்.

இப்போது பாரதம் தனது விண்வெளித் துறையை தனியார் துறைக்கும் திறந்து விட்டிருக்கிறது. இன்று பல இளைஞர்கள், விண்வெளி ஸ்டார்ட் அப்புகளில் புதிய கொடிகளை நாட்டி வருகிறார்கள். பத்தாண்டுகள் முன்னர் இந்தத் துறையில் ஒரே ஒரு நிறுவனமே இருந்தது,

ஆனால் இன்று தேசத்திலே 325-க்கும் மேற்பட்ட விண்வெளி ஸ்டார்ட் அப்புகள் செயலாற்றி வருகின்றன. வரவிருக்கும் காலங்களில் விண்வெளித் துறையில் பல புதிய சாத்தியக்கூறுகள் உருவாக இருக்கின்றன. பாரதம் புதிய உயரங்களை எட்டவிருக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

# மாற்று பணி ஆசிரியர்களை விடுவிக்க வேண்டும்: பள்ளிக்கல்வி துறை உத்தரவு

சென்னை, ஏப்.28-

மாற்றுப் பணி உத்தரவு பெற்று, வேறு பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களை உடனே அங்கிருந்து விடுவித்து அவரவர் பள்ளிகளுக்கு அனுப்புமாறு பள்ளிக்கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கும் பள்ளிக் கல்வி இயக்குநரகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கை: கடந்த 2024 -25ம் ஆண்டில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் சில பட்டதாரி ஆசிரியர்களுக்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையில் வேறு பள்ளிகளில் மாற்றுப் பணி பார்ப்பதற்கு ஆணை வழங்கப்பட்டது. நடப்பு கல்வி ஆண்டுக்கான கடைசி வேலை நாள் ஏப்ரல் 30ம் தேதியுடன் முடிவடைய உள்ளது.

எனவே, கடந்த ஆண்டில் மாற்றுப் பணி உத்தரவு மூலம் வேறு பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களை அங்கிருந்து உடனடியாக விடுவித்து, பள்ளி இறுதி வேலை நாளில் அவரவர் பள்ளியில் சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



இந்தியாவில் தங்கியிருக்கும் பாகிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான காலக்கெடு நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் அட்டாரி வழியாக பாகிஸ்தானியர்கள் சொந்த நாடு திரும்பி செல்லும் காட்சி.

### பாகிஸ்தானியர்கள் வெளியேற

# மத்திய அரசு விதித்த காலக்கெடு நிறைவு

## அட்டாரி வழியாக சொந்த நாடு திரும்பினர்

புதுடெல்லி, ஏப். 28-

இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் வெளியேற மத்திய அரசு விதித்த காலக்கெடு நேற்றுடன் நிறைவு பெற்றதை அடுத்து அட்டாரி வழியாக பாகிஸ்தானியர்கள் சொந்த நாடு திரும்பினர்.

காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப்பயணிகள் மீது கடந்த 22-ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அப்பாவி பொதுமக்கள் 26 பேர் கொல்லப்பட்டனர். உலகையே உலுக்கிய இந்த தாக்குதலில் பாகிஸ்தானின் தொடர்பு இருப்பதாக மத்திய அரசு குற்றம் சாட்டி வருகிறது. அத்துடன் பாகிஸ்தானுக்கு எதிராக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக சிந்து நதிநீர் ஒப்பந்தம் ரத்து, நாட்டில் இருந்து பாகிஸ்தானியர்கள் வெளியேற்றம், விசா ரத்து என பல்வேறு அதிரடிகள் நடந்து வருகின்றன.

இந்த நிலையில், மருத்துவ விசா தவிர பிற விசாக்கள் மூலமாக இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் வெளியேற மத்திய அரசு விதித்திருந்த காலக்கெடு நேற்றுடன் நிறைவு பெற்றது. இதனிடையே, தனது விசா ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து பாகிஸ்தானிய பெண் தொடர்ந்த வழக்கை டெல்லி உயர்நீதிமன்றம் ஏற்க மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே பாகிஸ்தானியர்கள் வெளியேற மத்திய அரசு விதித்த காலக்கெடு நேற்றுடன் நிறைவு பெற்றதை அடுத்து அட்டாரி வழியாக பாகிஸ்தானியர்கள் சொந்த நாடு திரும்பி சென்றனர்.

# டெல்லியில் 5 ஆயிரம் பாகிஸ்தானியர்கள்: காவல்துறைக்கு உளவுத்துறை பட்டியல்

புதுடெல்லி, ஏப்.28-

தேசிய தலைநகர் டெல்லியில் வசிக்கும் பாகிஸ்தானியர்கள் சொந்தநாடு திரும்புவதை உறுதி செய்வதற்காக 5,000 பாகிஸ்தானியர்களின் பெயர் பட்டியலை டெல்லி போலீஸாரிடம் உளவுத் துறை ஒப்படைத்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானியர்களுக்கான விசாக்களை மத்திய அரசு ரத்து செய்தது. இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்கள் சொந்த நாடு திரும்ப உத்தரவிடப்பட்டது. இந்தநிலையில் வெளிநாட்டு பிராந்திய பதிவு அலுவலகம் பாகிஸ்தானியர்களின் பெயர் பட்டியலை டெல்லி சிறப்பு பிரிவு போலீஸாருடன் பகிர்ந்து கொண்டது. அடையாளங்களைச் சரிபாக்கும் வகையில் மாவட்ட ஆட்சியர்களுக்கும் இந்த பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் நீண்ட காலம் விசா அனுமதி வைத்திருக்கும், இந்து பாகிஸ்தானியர்களின் பெயர்களும் அடங்கும்.

டெல்லியில் வசிக்கும் பாகிஸ்தானியர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து அவர்களை விரைவில் இந்தியாவை விட்டு வெளியேறச் சொல்லும் பொறுப்பு டெல்லி போலீஸின் சிறப்பு பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஏப்.27ம் தேதி முதல் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் மருத்துவம், ராஜாங்க மற்றும் நீண்டகால விசாக்கள் வைத்திருப்பவர்களைத் தவிர பிற பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களுக்கான விசாக்களை ரத்து செய்வது தொடர்பாக வெள்ளிக்கிழமை மத்திய உள்துறை அமைச்சகம், ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. மருத்துவ விசாக்களும் 29ம் தேதி வரை மட்டுமே செல்லுபடியாகும் என்று தெரிவித்திருந்தது.

# டில்லியில் பயங்கர தீ விபத்து: 400-க்கும் மேற்பட்ட குடிசைகள் நாசம், 2 பேர் பலி

புதுடில்லி, ஏப்.28-

தலைநகர் டில்லியில் குடிசைப் பகுதியில் நிகழ்ந்த தீவிபத்தில் 2 பேர் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வடமேற்கு டில்லியின் ரோகிணிப் பகுதியில் உள்ள ஜுக்கி கிளஸ்டரில் ஞாயிற்றுக்கிழமை காலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் கிடைத்ததும் நிகழ்விடத்துக்கு 20 தீயணைப்பு வாகனங்கள் விரைந்தன. காவல் துறையின் கூற்றுப்படி, 400க்கும் மேற்பட்ட குடிசைகள் தீயில் எரிந்து நாசமாகின.

இதுவரை இரண்டு உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் இருந்து அடர்த்தியான புகை மூட்டம் எழுவதைக் காண முடிந்தது என்று மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தீயை அணைக்க தற்போது தீயணைப்பு வீரர்கள் முயற்சிக்கின்றனர். மேலும் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை நடந்து வருகிறது என்று அவர் மேலும் கூறினார்.

போலீஸ் மற்றும் தீயணைப்பு படை குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. இப்போது, குளிரூட்டும் பணி நடந்து வருகிறது. இரண்டு உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று ரோகிணி துணை காவல் ஆணையர் அமித் கோயல் தெரிவித்தார்.

### பஹல்காம் தாக்குதலில் பலியானவரின்

# குடும்பத்தினரை சந்தித்து கேரள முதல்வர் ஆறுதல்

கொச்சி, ஏப்.28-

கொச்சியில் பஹல்காம் தாக்குதலில் பலியானவரின் வீட்டிற்கு ஞாயிற்றுக்கிழமை சென்று கேரள முதல்வர் பினராயி ஆறுதல் கூறினார்.

ஜம்மு-காஷ்மீரின் பஹல்காம் அருகே சுற்றுலாத் தலத்தில் பயங்கரவாதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய கொடூர தாக்குதலில் 25 இந்தியர்கள், ஒரு நேபாளி உள்பட 26 பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு உலக நாடுகளும் கண்டனங்களை தெரிவித்துள்ளன. இந்த பயங்கரவாதத் தாக்குதலில் கேரளத்தைச் சேர்ந்த ஒருவரும் பலியானார். ராமச்சந்திரன் தனது மனைவி ஷீலா, துபாயில் பணிபுரியும் மகள் ஆரத்தி மற்றும் அவரது இரட்டை மகன்களுடன் காஷ்மீரில் விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்தார்.

அப்போது அவரது மகள் மற்றும் பேரக்குழந்தைகள் முன்னிலையில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். ராமச்சந்திரனின் இறுதிச் சடங்குகள் வியாழக்கிழமை முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றன.

இந்த நிலையில் பஹல்காம் தாக்குதலில் பலியான ராமச்சந்திரனின் வீட்டிற்கு ஞாயிற்றுக்கிழமை நேரில் சென்று கேரள முதல்வர் பினராயி ஆறுதல் கூறினார்.

நிதியமைச்சர் கே.என். பாலகோபால் மற்றும் சி.பி.எம். மாநிலச் செயலர் எம்.வி. கோவிந்தன் ஆகியோரும் முதல்வருடன் உடன் சென்றனர். பின்னர் முதல்வர் பினராயி விஜயன் ஊடகங்களைச் சந்திக்காமல் அங்கிருந்து கிளம்பிச் சென்றார்.

# ஜம்மு-காஷ்மீரில் பயங்கரம்: சமூக ஆர்வலர் சுட்டுக்கொலை

ஸ்ரீநகர், ஏப்.28-

ஜம்மு-காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் 45 வயது சமூக ஆர்வலர் ஒருவர் மீது பயங்கரவாதிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் அவர் காயமடைந்தார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் (சனிக்கிழமை) இரவு கண்டி காஸில் வசித்து வந்த சமூக ஆர்வலர் குலாம் ரசூல் மாக்ரேயின் வீட்டிற்குள் பயங்கரவாதிகள் நுழைந்து அவரை சுட்டுக் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ரசூலைக் கொன்ற பயங்கரவாதிகளைக் கண்டுபிடிக்க பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பஹல்காமில் 26 பேர் கொல்லப்பட்ட தாக்குதலுக்குப் பிறகு, காஷ்மீர் பள்ளத்தாக்கில் பயங்கரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் மற்றும் பயங்கரவாத ஆதரவாளர்கள் என்று கூறப்படும் வீடுகள் சோதனை செய்யப்பட்டுள்ளன. கடந்த நான்கு நாட்களில், 2,000 க்கும் மேற்பட்டவர்களை போலீசார் கைது செய்துள்ளனர்.

# கோவையில் ஜல்லிக்கட்டு: அமைச்சர் செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்



கோவை, ஏப்.28-

கோவை மாவட்ட நிர்வாகம், தமிழர் பண்பாட்டு ஜல்லிகட்டு பேரவை, கோவை இணைந்து நடத்தும் மாபெரும் ஜல்லிக்கட்டு திருவிழா கோவை செட்டிபாளையம் எல் அண்ட் டி புறவழிச் சாலை அருகே நேற்று தொடங்கியது.

தமிழக மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, போட்டியை தொடங்கி வைத்தார். தமிழர் பண்பாட்டு ஜல்லிகட்டு பேரவை தலைவர் தளபதி முருகேசன் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சியர் பவன்குமார், மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கார்த்திகேயன், தி.மு.க., மாநகர் மாவட்ட செயலாளர் நா. கார்த்திக்., வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, எம்.பிக்கள் கணபதி ராஜ்குமார், ஈஸ்வரசாமி, துணைமேயர் வெற்றிச்செல்வன், உள்ளிட்ட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

தமிழக முதல்வர் சார்பில், அதிக காளைகளை பிடித்த மாடுபிடி வீரருக்கு ஒரு காரும், யாருக்கும் பிடிபடாத சிறந்த காளைக்கு துணை முதல்வர் சார்பில் ஒரு காரும் பரிசாக வழங்கப்பட்டது.

முன்னதாக ஜல்லிக்கட்டு போட்டியில், பங்கேற்ற வீரர்கள் அமைச்சர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். 800-க்கும் மேற்பட்ட காளைகள் களம் இறக்கப்படுகின்றன. முதல் காளையாக கோவை வரதராஜ பெருமாள் கோவில் காளை களம் இறங்கியது. கோவை மற்றும் சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆர்வத்துடன் போட்டியை கண்டு ரசித்து வருகின்றனர்.

# புதுச்சேரியில் பள்ளிகளுக்கு விடுமுறை

புதுச்சேரி, ஏப்.28-

அதிகரிக்கும் கடும் கோடை வெயில் தாக்கத்தால் புதுச்சேரியில் உள்ள பள்ளிகளுக்கு இன்று முதல் கோடை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இன்று முதல் ஜூன் 1ம் தேதி வரை கோடை விடுமுறை விடப்பட்டுள்ளது.

புதுச்சேரி, காரைக்கால், மாகே, ஏனாமில் உள்ள அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு இன்று முதல் ஜூன் 1ம் தேதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், புதுச்சேரியில் உள்ள அரசு, அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை முடிந்து ஜூன் 2ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்படுகிறது.

முன்னதாக, தமிழகத்தில் 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு மாணவர்களுக்கான இறுதித்தேர்வு கடந்த 24ம் தேதி முடிந்த நிலையில், கடந்த 25ம் தேதி முதல் கோடை விடுமுறை விடுக்கப்பட்டது. பள்ளிகள் திறப்பு ஜூன் 2ம் தேதி என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### ஜம்மு-காஷ்மீரில் இதுவரை

# பத்து பயங்கரவாதிகளின் வீடுகள் இடித்து தரைமட்டம்

ஸ்ரீநகர், ஏப்.28-

ஜம்மு-காஷ்மீரில் 10 பயங்கரவாதிகளின் வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

ஜம்மு - காஷ்மீரிலுள்ள பஹல்காம் சுற்றுலா தலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தானிலிருந்து ஊடுருவியதாக சந்தேகிக்கப்படும் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் அங்கு சுற்றுலாவுக்குச் சென்றிருந்த 26 பேர் கொல்லப்பட்டனர். இதன் எதிரொலியாக, பாகிஸ்தானுடனான உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டிருப்பதுடன் இருநாட்டு எல்லையில் போர்ப் பதற்றமும் அதிகரித்துள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் செயல்படும் லஷ்கர்- ஏ- தொய்பா பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான 'தி ரெசிஸ்டன்ஸ் பிரண்ட்' பொறுப்பேற்றது.

பஹல்காம் போன்று இனியொரு தாக்குதல் நிகழாமல் தடுக்கும் நோக்கத்துடன் கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதி களுக்கு உதவியதாக நூற்றுக்கணக்கானோரைப் பிடித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக, தெற்கு காஷ்மீரில் நான்கு பயங்கரவாதிகளின் வீடுகள் வெள்ளிக்கிழமை இரவில் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இந்தநிலையில், இதுவரை மொத்தம் 10 பயங்கரவாதிகளின் வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

# நீட் தேர்வு மோசடிகளை தடுக்க புதிய இணையதளம்

புதுடெல்லி, ஏப். 28-

நீட் தேர்வில் வினாத்தாள் கசிவு போன்ற மோசடி தொடர்பான புகார்களை தெரிவிக்க தேசிய தேர்வு முகமை அமைப்பு புதிய இணையதளத்தை தொடங்கியுள்ளது.

NEET.NTA.AC.IN அல்லது NTA.AC.IN இணையதளங்களின் வாயிலாக புகார்களை அளிக்கலாம் என்றும் ஆதாரத்துடன் புகார்களை பதிவு செய்தால் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது.

மேலும், ஆசை காட்டி மோசடியில் ஈடுபடுவோரை நம்பி ஏமாற வேண்டாம் என தேசிய தேர்வு முகமை அறிவுறுத்தியுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இந்தியாவை தாக்க 130 அணு ஆயுதங்கள் தயார்

## பாக்., அமைச்சரின் மிரட்டல் பேச்சால் பரபரப்பு

லாகூர், ஏப்.28-

கோரி, ஷாஹீன், கஸ்னவி ஏவுகணைகள் மற்றும் 130 அணு ஆயுதங்கள் இந்தியாவை தாக்க தயாராக உள்ளதாக பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி கூறியுள்ளார்.

கடந்த 22-ம் தேதி அன்று ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கி சூட்டில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். பயங்கரவாதிகளின் இந்த தாக்குதல் தேசம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தீவிரவாதத்துக்கு புகலிடம் அளிக்கும் பாகிஸ்தானை வழிக்கு கொண்டுவர, சிந்து நதிநீர்ப் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்துவது உள்ளிட்ட 5 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் அமைச்சர் ஹனிஃப் அப்பாஸி கூறியதாவது: "பாகிஸ்தானுக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்தினால், அவர்கள் போருக்கு தயாராக இருக்க வேண்டும். எங்களிடம் உள்ள ராணுவ உபகரணங்கள், ஆயுதங்கள், அணு ஆயுதங்கள் மற்றும் ஏவுகணைகள் வெறும் கண்காட்சிக்கானது அல்ல. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் 130 அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவை எங்கு உள்ளன என்று யாருக்கும் தெரியாது. இந்த அணு ஆயுதங்கள் அனைத்தும் இந்தியாவை மட்டுமே குறி வைத்து நிறுத்தப்பட்டுள்ளன" என கூறியுள்ளார்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்தும் வரை, இந்தியா- பாகிஸ்தான் இடையே கடந்த 1960-ஆண்டு செய்து கொண்ட சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. இதன் காரணமாக பாகிஸ்தானில் நீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது.

# விஜய் வருகையால் இடையூறு: த.வெ.க.வினர் மீது வழக்குப்பதிவு

கோவை, ஏப். 28-

கோவை விமான நிலையத்தில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் வருகையின்போது இடையூறு ஏற்படுத்தியதாக த.வெ.க. நிர்வாகிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

த.வெ.க. மாவட்டச் செயலாளர் சம்பத் உள்ளிட்டோர் மீது பீளமேடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னறிவிப்பு இல்லாமல் மக்களை திரட்டி விமான நிலையத்தில் பயணிகளுக்கு இடையூறு, பொருள்கள் சேதம் உள்ளிட்ட பிரிவுகளில் கீழ் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

மேலும், சாலையில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும் த.வெ.க. தொண்டர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. தமிழக வெற்றிக் கழகத்தின் பூத் கமிட்டி நிர்வாகிகள் கருத்தரங்கு கோவையில் நேற்று முன்தினம் (ஏப். 26) நடைபெற்றது. த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்று வாக்குச்சாவடி முகவர்களுக்கு ஆலோசனையை வழங்கினார். த.வெ.க. தலைவர் விஜய் வருகையின்போது ஏராளமான தொண்டர்கள் கோவை விமான நிலையத்தில் குவிந்தனர். முன்னறிவிப்பு இல்லாமல் தொண்டர்கள் குவிந்ததால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இந்து மதத்தில் நீண்ட காலமாக அகிம்சை கொள்கைகள் உள்ளன. உலகில் பல மதங்கள் உள்ளன. அவற்றைப் பின்பற்றுவோருக்கு அந்தந்த மதங்கள் பெரிதாக இருக்கலாம். ஆனால் ஒருவர் தான் தேர்வு செய்த மதத்தை பின்பற்றி, பிற மதங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். யாரும் யாரையும் மாற்ற முயற்சிக்கக் கூடாது.

- மோகன் பாகவத்



சென்னை, குமரி அருகே ஆழ்கடலில் எரிவாயு எடுக்க மத்திய அரசு அனுமதி அளிப்பதா? கடல் வளத்தைக் கெடுக்கும் இந்தத் திட்டத்திற்கு தமிழக அரசு கடும் எதிர்ப்பு தெரிவிப்பதுடன், மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து ஆழ்கடலில் எண்ணெய், எரிவாயு எடுக்கும் திட்டத்தைக் கைவிடச் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ராமதாஸ்



புல்டோசரை கொண்டு அரசியல் சாசனத்தை தகர்க்க முடியவில்லை. உளி, சுத்தியலை வைத்து கொஞ்சம் கொஞ்சமாக உடைக்கலாம் என்றுதான் கடந்த ஓராண்டாக குடியுரிமை திருத்தச் சட்டம், வக்பு சட்டம், கல்வி உரிமையை சிதைப்பது என பல சட்டங்கள் மூலம் கொஞ்சம் கொஞ்சமாக மத்திய பா.ஜ.க. அரசு அரசியல் சாசனத்தை சிதைத்து வருகிறது.

- ப.சிதம்பரம்



மத்திய அரசு பணியில் சேருவோருக்கு காவல்துறை சரிபார்ப்பு அறிக்கை வழங்குவது மிக முக்கியமான பணி. அதில் செய்யப்படும் தாமதத்தால் பணியாளர்கள் தொடங்கி நிறுவனங்கள் வரை பல வகையான பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதைக் களைய தமிழ்நாட்டில் காவல்துறை சரிபார்ப்பு அறிக்கை தாக்கல் செய்யும் நடைமுறையை டிஜிட்டல் மயமாக்க வேண்டும்.

- அன்புமணி

# சிங்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார்



**ஊட்டி, ஏப்.28-**

நீலகிரி மாவட்டம், சிங்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம் மற்றும் பைக்காரா நீர் மின் நிலையம் ஆகிய மின் நிலையத்தினை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் சென்று பார்வையிட்டார்.

முதலாவதாக சிங்காரா இறுதி நிலை நீர் மின் நிலையம் மற்றும் பைக்காரா நீர் மின் நிலையம் ஆகிய மின் நிலையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு மேற்கொள்ளப்படும் மின் உற்பத்திதிறன் மற்றும் அதன் செயல்பாடுகள் தொடர்பாக துறைச்சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

பின்னர், ஊட்டி காமராஜ்சாகர் அணை மற்றும் கிளன்மார்கன் அணை ஆகிய அணைகளை நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து துறைச்சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வுகளின் போது, உதவிபொறியாளர்கள் பைக்காரா இறுதி நிலை நீர்மின் நிலையம் பாலாஜி (இயக்கம்), சிங்காரா இறுதி நிலை நீர்மின் நிலையம் ராமலிங்கம் (மின்னியில்), பைக்காரா ஆணை சிந்துஜா (கட்டடவியல்) உட்பட பலர் உடனிருந்தனர்.

# ஏற்றம் அறக்கட்டளை சார்பாக தசை சிதைவு நோய் பாதிக்கபட்டவர்களுக்கு இலவச ஹோமியோபதி மருத்துவ முகாம்



**ஈரோடு. ஏப்.28-**

ஏற்றம்அறக்கட்டளை சார்பாக. 8 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் தசை சிதைவு நோய் பாதிக்கபட்டவர்களுக்கு 38வது முறையாக இலவச ஹோமியோபதி மருத்துவமுகாம் ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள அரிமா சிற ப்பு ப்பள்ளி வளாகத்தில் நேற்று நடத்தபட்டது. இந்த மருத்துவ முகாமிற்கு அதன் நிறுவன தலைவர் ஆர். மோகனசுந்தரம் தலைமை தாங்கினார் ஈரோடு கங்கா புட்ஸ் உரிமையாளர் லோகேஷ் முகாமை துவக்கிவைத்தார். முகாமில் சிறப்புமருத் துவர் ஜெபர்சன் ஜேம்ஸ் அரியவகை நோயான தசை சிதைவால்பாதிக்கபட்டோர்களுக்கு சிறப்பு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கி சிகிச்சை அளித்தனர் இந்த முகாமில் இலவசமாக மருந்து மாத்திரை மற்றும் உணவு வழங் கப்பட்டது

இதில் சென்னை ஊட்டி விருதுநகர் கோவை சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட் டங்களில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட நோய் பாதி க்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றனர்

# ஈரோட்டில் அரசுப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட வேண்டும்: மக்கள் சிந்தனைப் பேரவையின் மாநிலப் பொதுக்குழுவில் தீர்மானம்



**ஈரோடு ஏப் 28-**

மக்கள் சிந்தனைப் பேரவையின் மாநில பொதுக்குழுக் கூட்டம் ஈரோட்டில் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு பேரவையின் மாநிலத் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் தலைமை வகித்தார். சென்னை, தஞ்சாவூர், நாமக்கல், மதுரை, திருப்பூர், சேலம், கரூர், ஈரோடு உள்ளிட்ட பல மாவட்டங்களிலிருந்து பேரவையின் பொதுக்குழு உறுப்பினர்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மாநில அளவில் பேரவை வளர்க்கப்பட வேண்டிய பல அம்சங்கள் பற்றி விவாதிக்கப்பட்டன.

ஈரோடு மாவட்டத்தில் ஒரு அரசுப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒரு தனிப் பல்கலைக்கழகம் உருவாக்குவதற்கான அனைத்துத் தனித் தகுதிகளும் தேவையும் ஈரோடு மாவட்டத்தில் உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் ஏற்கனவே செயல்பட்டு வரும் பாரதியார் பல்கலைக் கழகத்தின் விரிவாக்கமையத்தை மூடுவதற்கான முடிவை பாரதியார் பல்கலைக்கழகம் எடுத்திருப்பதாக பேரவை அறி கி றது. அ வ் வி ரி வா க்க மையம் எக்காரணம் கொண்டும் மூடப்படக்கூடாது என்றும் அடுத்த கட்டமாக பல்கலைக்கழகம் இங்கு கொண்டுவரப்படுவதற்கு முன்னோட்டமாக விரிவாக்க மையம் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்றும் பேரவையின் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

உள்ளிட்ட பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. பேரவையின் மாநிலத் துணைத்தலைவர் பேராசிரியர் கோ. விஜயராமலிங்கம், மாநிலச் செயலாளர் ந. அன்பரசு உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## பாசனங்களுக்கு நீர் திறப்பு அதிகரிப்பு: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 70 அடியாக குறைந்தது

**ஈரோடு, ஏப்.28-**

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும், விவசாயிகளின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையிலிருந்து கடந்த சில நாட்களாக அணைக்கு வரும் நீர்வரத்தை விட பாசனங்களுக்கு அதிக அளவில் நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 70.70 அடியாக குறைந்து உள்ளது. பவானிசாகர் அணைக்கு நேற்று காலை நிலவரப்படி 577 கன அடியாக நீர்வரத்து வந்து கொண்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு 2,300 கன அடி நீரும், குடிநீருக்காக பவானி ஆற்றுக்கு 150 கன அடியும், காளிங்கராயன் பாசனத்திற்கு 500 கன அடியும் என மொத்தம் பவானிசாகர் அணையில் இருந்து பாசனங்களுக்கு 2,950 கன அடி நீர் திறக்கப்பட்டு வருகிறது.

நேற்று காலை நிலவரப்படி குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் 25.53 அடியாக உள்ளது. இதேபோல் வரட்டுபள்ளம் அணையின் நீர்மட்டம் 25.59 அடியாக உள்ளது. 30 அடி கொள்ளளவு கொண்ட பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் 17.13 அடியாக உள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில்

# 25 ஆயிரத்து 24 பயனாளிகளுக்கு ரூ.239.41 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள்: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்




**கோவை,ஏப்.28-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (27.4.2025) கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஹாக்கி மைதானம் அமைக்கும் பணி உட்பட 82.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 29.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 54 திட்டப்பணிகளை திறந்து வைத்து, 25,024 பயனாளிகளுக்கு 239.41 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கோயம்புத்தூர் மாநகராட்சியின் சார்பில் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி வளாக விளையாட்டு மைதானத்தில் 6,500 சதுர மீட்டர் பரப்பளவில், 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளி தளத்துடன் கூடிய ஹாக்கி மைதானம் அமைக்கும் பணி உட்பட, பொதுப்பணி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பேரூராட்சிகள் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் 82.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 132 புதிய திட்ட பணிகளுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகத்தில் 10.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நாளொன்றுக்கு 2.0 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட தானியங்கி பன்னீர் ஆலை உள்பட பொதுப்பணித்துறை, கோயம்புத்தூர் மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பேரூராட்சிகள் துறை, வேளாண்மை துறை ஆகிய துறைகளின் மூலம் மொத்தம் 29.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 54 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் திறந்து வைத்தார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் 586 பயனாளிகளுக்கு 18.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகளையும், மகளிர் திட்டத்துறையின் கீழ் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 2,240 மகளிருக்கு 13.73 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகளையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் 533 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களையும், 4,910 நபர்களுக்கு நிலவரித் திட்ட பட்டாக்களையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2,772 நபர்களுக்கு இ – பட்டாக்களையும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 700 நபர்களுக்கு இ – பட்டாக்களையும், 690 நபர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டைகளையும், டாக்டர் முத்துலட்சுமி மகப்பேறு உதவித் தொகை திட்டத்தின் கீழ் 3,220 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், தாட்கோ திட்டத்துறையின் கீழ் 3,418 பயனாளிகளுக்கு தூய்மைப் பணியாளர் நலவாரிய அட்டைகளையும், வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 4,162 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும் என பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் மொத்தம் 25,024 பயனாளிகளுக்கு 239.41 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என். கயல்விழி செல்வராஜ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி ப. ராஜ்குமார், க.ஈஸ்வரசாமி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் ரா. வெற்றி செல்வன், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் கூடுதல் ஆட்சியர் வளர்ச்சி சங்கேத் பல்வந்த் வாகே மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.மோ.ஷர்மிளா, ஆவின் பொது மேலாளர் டாக்டர்.ஆர்.சண்முகம், தமிழ்நாடு ஹாக்கி சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்கும் கட்சிக்கே ஆதரவு

## மாநில தலைவர் பி.ஆர்.பாண்டியன் பேட்டி



**ஊட்டி, ஏப்.28-**

வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் விவசாயிகளுக்கு ஆதரவாக இருக்கும் கட்சிக்கே ஆதரவு என ஊட்டியில் மாநில தலைவர் பி.ஆர்.பாண்டியன் கூறினார். இது குறித்த விவரமாவது-

தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு மாநில பொதுக்குழு கூட்டம் ஊட்டி சீனிவாச பெருமாள் மண்டபத்தில் கடந்த இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் அதன் தலைவர் பி ஆர் பாண்டியன் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் அய்யாக்கண்ணு, ராமகவுண்டர், நீலகிரி படுக தேச விவசாயிகள் சங்க தலைவர் மஞ்சை மோகன்மற்றும் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் 70 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு பின்னர் மாநில தலைவர் பி ஆர் பாண்டியன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது-

தமிழக அரசு விவசாயிகளை அகதிகளாக்கி இருக்கிறது. தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சட்டத்தை உடனடியாக திரும்ப பெற வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் உற்பத்தி பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணய சட்டத்தை மத்திய அரசு கொண்டுவர வேண்டும். வரும் 4-ந்தேதி நடைபெற உள்ள நான்காம் கட்ட பேச்சு வார்த்தையில் மத்திய அரசு அதற்கான உத்திரவாதம் அளித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துவதாகவும் கடந்த சட்டமன்றத் தேர்தலில் நெல் குவிண்டால் ஒன்றுக்கு 2500 ரூபாயும் கரும்பு டன் ஒன்றிற்கு 4000 ரூபாயும் ஆட்சிக்கு வந்த மறுநாளே தருவதாக கூறிய திமுக அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் ஆகியும் அதை வழங்காமல் ஏமாற்றி விட்டனர் .எனவே இன்றைய விலைவாசி ஏற்றத்திற்கு தகுந்தார் போல் நெல் குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயும் கரும்பு ஒரு டன்னிற்கு ஐந்தாயிரம் ரூபாயும் நிர்ணயம் செய்ய வேண்டும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய சந்தை வசதி ஏற்படுத்தி தர வேண்டும், மலைப்பகுதியில் விளையக் கூடிய பூண்டு மற்றும் கேரட்டிற்க்கு உலகம் முழுவதும் தட்டுப்பாடு உள்ள நிலையில் அதை விளைவிக்கும் இடத்தில் மிக குறைவான விலையே கிடைக்கிறது. எனவே மாவட்ட ஆட்சியர் தலைமையில் தோட்டக்கலை பயிர்களுக்கு விலை உத்தரவாத நிர்ணய குழு அமைத்து விளைப் பொருட்களுக்கு லாபகரமான குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்து, இந்த விலையை சந்தைப்படுத்தும் இடத்திலும் கண்டிப்புடன் பின்பற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். திமுக அரசு பொறுப்பு ஏற்றது முதல் விவசாயிகளுக்கு எதிராக சட்டங்களை போட்டு நிலத்தை தர மாட்டேன் என்று போராடியவர்களை குண்டர் சட்டத்தில கைது செய்துள்ளனர். விவசாயிகளுக்கு எதிரான திட்டங்களையே தனது கொள்கையாக திமுக அரசு பின்பற்றுகிறது .விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அவர்களுக்கு சென்றடைவதில்லை ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு அரசு முடங்கிப் போய் இருக்கிறது. இதனால் தமிழக விவசாயிகள் ஒட்டுமொத்த பின்னடைவை சந்தித்துள்ளனர்.எனவே வருகிற 2026 தேர்தலில் வெற்றியை நிர்ணயிக்கும் சக்தியாக விவசாயிகள் திகழ்வார்கள், விவசாயிகளை ஒருங்கிணைத்து அவர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய அரசியல்வாதிகளை அடையாளம் கண்டு அவர்களை ஆதரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் விவசாய சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகளை படுகதேச விவசாயிகள் சங்கம் செய்திருந்தது.

# கள் விற்ற இருவர் கைது

**ஈரோடு, ஏப். 28 -**

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை அருகே உள்ள குறிச்சி பகுதியில் அரசால் தடை செய்யப்பட்டுள்ள போதை பொருளான கள் விற்பனை செய்யப்படுவதாக அம்மாபேட்டை போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. அதன்பேரில், போலீசார் அங்கு சென்று கண்காணித்தபோது, கூச்சிக்கல்லூர், செங்காட்டுத் தோட்டம் பகுதியில் ஒரு நபர் கள் விற்பனையில் ஈடுபட்டிருந்தது தெரியவந்தது. விசாரணையில் அவர், அதேபகுதியில் உள்ள பள்ளத்துகொட்டாய் பகுதியை சேர்ந்த பொன்னுசாமி (69) என்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவர் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். மேலும் அவரிடமிருந்த 5 லிட்டர் கள்ளையும் பறிமுதல் செய்தனர். அதேபோல, அருகில் உள்ள ராமச்சிபாளையம் பகுதியிலும் கள் விற்பனையில் ஈடுபட்டிருந்த சண்முகம் (57) என்பவரையும் அம்மாபேட்டை போலீசார் பிடித்து வழக்குப் பதிவு செய்து, கைது செய்தனர். அவரிடமிருந்தும் 5 லிட்டர் கள் பறிமுதல் செய்யப்பட்டது.

# ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சார்பில் குண்டுதோல் மந்தில் புதுப்பிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைப்பு




ஊட்டி, ஏப்.28-

ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சார்பில் குண்டு தோல் மந்தில் புதுப்பிக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், ஊட்டியருகே லவ்டேல் பகுதியில் அமைந்துள்ளது குண்டு தோல் மந்து எனும் தோடர் பழங்குடியினர் வசிக்கும் கிராமம்.

இங்குள்ள இன்பவள்ளி, நேப்ராணி ஆகியோரின் வீடுகள் மிகவும் பழுதடைந்து கதவுகள் இல்லாமலும், மேல்கூரை பெயர்ந்தும்; வசிக்க முடியாத வகையில் இருந்துள்ளது. இதனை கண்ட

ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சங்க தலைவர் ஆர்க்கிடெக் பொறியாளர் சச்சிதானந்தன், சங்க நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து அந்த இரண்டு வீடுகளை புதுப்பித்து வழங்க தீர்மானித்தனர். அதனையடுத்து அந்த வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, மின்சார வசதி ஏற்படுத்தி, தரை செப்பனிடப்பட்டு அனைத்தும் பணிகளும் செய்து முடிக்கப்பட்டன. அந்த வீடுகளை பயனாளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

சங்க தலைவர் சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரோட்டரி 3203 மாவட்ட கவர்னர் டாக்டர் சுரேஷ்பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வீடுகளை திறந்து வைத்து, பயனாளிகளிடம் சாவிகளை வழங்கி பேசியதாவது-

ரோட்டரி மாவட்டம் 3203ன் கீழ் 101 கிளப்கள் உள்ளன. இதன் மூலம் பழங்குடியினர்களின் முன்னேற்றம், புற்றுநோய் விழிப்புணர்வு உள்ளிட்ட தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு வருகிறோம்.

எனவே இதுபோன்று இதர பழங்குடியின மக்களுக்கு ஏதாவது தேவைப்படின் கோரிக்கை வைத்தால் நிறைவேற்றித்தரப்படும் என்றார்.

இந்நிகழ்வில் ரோட்டரி மாவட்ட பொது செயலாளர் வழக்கறிஞர் ஜெயராமன், ரோட்டரி நீலகிரி வெஸ்ட் சங்க செயலாளர் லீனா ராஜேஷ், பொருளாளர் சீனிவாச ராவ், திட்ட தலைவர் பேராசிரியர் கோபால், சங்க உறுப்பினர்கள் கீதா சீனிவாசன், டாக்டர் பாலசுப்பிரமணியம், ஸ்டீபன், ஆடிட்டர் ராம்ஜி, ஆனந்தி சந்திரன், வருங்கால தலைவர் ரஞ்சித், ரோட்டரி சங்கத்தினர், தோடர் இன மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து சங்க தலைவர் சச்சிதானந்தன் கூறுகையில் கடந்த 10 மாத காலத்தில் பல்வேறு மருத்துவ முகாம், ரத்ததான முகாம்கள் போன்ற பிராஜக்ட்களை செய்துள்ளோம்.

வரும் இரண்டு மாத காலத்திற்குள் ஊட்டி ஹோபார்ட் பள்ளி பேருந்து நிறுத்தம் பகுதியில் ஒரு நிழற்குடை அமைக்க உள்ளோம் என்றார்.

# வெலிங்டன் ராணுவ மையத்தில் இருசக்கர வாகன பேரணி



ஊட்டி, ஏப்.28-

வெலிங்டன் ராணுவ மையத்தில் இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது. நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகேயுள்ள வெலிங்டன் ராணுவ மையம் சார்பில் முன்னாள் படைவீரர்கள் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துகின்ற வகையில் இருசக்கர வாகன பேரணி நேற்று தொடங்கியது. வரும் 29ஆம் தேதி வரை நடைபெறும் இந்த பேரணியை வெலிங்டன் ராணுவ மைய தளபதி பிரிகேடியர் சுனில்குமார் யாதவ் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த குழு தமிழகத்தின் திருப்பூர், கரூர் திண்டுக்கல், மதுரை தேனி, கோவை மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டு முன்னாள் படைவீரர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்க உள்ளனர்.

# தொட்டபெட்டா சிகரத்திற்கு அதிகளவிலான அரசுப்பேருந்துகளை இயக்க கோரிக்கை

ஊட்டி, ஏப்.28-

தொட்டபெட்டா சந்திப்பிலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு அதிகளவிலான அரசுப்பேருந்துகளை இயக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொட்டபெட்டா சந்திப்பிலிருந்து தொட்டபெட்டா சிகரத்திற்கு செல்ல அரசு பேருந்துகள் இயக்கப்படுவதில்லை. ஆனால் இரண்டு பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுவதாக அங்கு பணியில் உள்ள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் அங்குள்ள ஜீப்புகள் மூலம் ஒருவருக்கு ரூ.150 முதல் 200 வரை மேலே செல்லவும், கீழே வர 150 முறை 200 வரை ஒருவருக்கு ரூ.300 முதல் 400 வரை செலவாகிறது.

அரசு போக்குவரத்து கழகம் இதனை கவனிக்குமா ஜீப்பில் ஏற்றி செல்பவர்களுக்கு டிக்கெட் போட்டு ஏற்றி செல்கிறார்கள் அதை எப்படி நீங்கள் அனுமதிக்கலாம். போக்குவரத்து கழகம் இதை கேட்பதில்லையா சுற்றுலா வந்த பயணிகளை நீலகிரி மாவட்டத்தில் இப்படித்தான் ஏமாற்றுவீர்களா? இதை போக்குவரத்து துறை வட்டாரப் போக்குவரத்து அலுவலக அதிகாரிகள் கவனிக்கமாட்டார்களா? நடவடிக்கை எடுக்க மாட்டார்களா??? போக்குவரத்து கழகமும் கவனிக்காதா???அனைவரும் தனியாருக்கு சாதகமாக செயல்பட்டு கொண்டு சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றுகிறீர்களா? என சுற்றுலா பயணி ஒருவர் தனது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

எனவே தொட்டபெட்டா சந்திப்பு முதல் தொட்டபெட்டா சிகரம் வரையுள்ள 3 கிலோமீட்டர் தொலைவிற்கு கொள்ளை லாபம் அடிக்கும் தனியார் ஜீப்புகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், இந்த தடத்தில் அதிகப்படியான சிறிய அளவிலான அரசு பேருந்துகளை இயக்க வேண்டுமெனவும் சுற்றுலாப் பயணிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# பெரிய சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் சித்திரை திருவிழா



ஈரோடு ஏப் 28 -

ஈரோடு கே எஸ் நகர் மரப்பாலம் ரோடு கருங்கல் பாளையம் பகுதியில் அமைந்துள்ளது அருள்மிகு பெரிய சமயம் புரம் மாரியம்மன் திருக்கோயில் கோயிலின் சித்திரை திருவிழா கடந்த 22ஆம் தேதி மாலை பூச்சாற்றுடன் தொடங்கப்பட்டது

தொடர்ந்து 24 ஆம் தேதி கம்பம் நடப்பட்டது 25ஆம் தேதி வெள்ளிக்கிழமை குத்து விளக்கு பூஜை நடைபெற்றது

இதைத் தொடர்ந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை முளைப்பாரி தீர்த்த குடங்கள் பூங்கரகம் எடுத்துவரப்பட்டு அம்மனுக்கு வழிபாடுகள் நடத்தப்பட்டது

இதில் மணி.. சரவணன் ...விக்கி ... ஆகிய பக்தர்கள் அலகு குத்தி வந்தனர் தொடர்ந்து பக்தர்கள் அக்னி சட்டி ஏந்தி வந்து அம்மனை வழிபட்டனர்.மதியம் அன்னதானம் வழங்கப்பட்டது தொடர்ந்து வரும் செவ்வாய்க்கிழமை அம்மன் உலா வருதல் நடைபெறுகிறது 30ஆம் தேதி புதன்கிழமை பொங்கல் வைத்தல் மாவிளக்கு எடுத்து அம்மனுக்கு வழிபாடுகள் நடைபெறுகிறதுபின் 1ஆம் தேதி வியாழக்கிழமை கம்பம் பிடுங்கப்பட்டு மஞ்சள் நீராட்டு விழா நடைபெறுகிறது.

ஏற்பாடுகளை கோல்டன் நண்பர்கள் மற்றும் பகுதி மக்கள் செய்திருந்தனர்

# பெருந்துறை கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.3.59 கோடிக்கு கொப்பரை ஏலம்

**பெருந்துறை, ஏப். 27-**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 3.59 கோடிக்கு நேற்று கொப்பரை விற்பனை நடைபெற்றது.

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் சனி மற்றும் புதன்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெற்று வருகிறது. அதன்படி, நேற்று நடைபெற்ற ஏலத்துக்கு மொத்தம் 4,924 மூட்டை கொப்பரைகளை சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள் கொண்டு வந்துருந்தனர்.

அதில், முதல் தரக் கொப்பரைகள் 2,185 மூட்டைகள் வரப் பெற்றிருந்தன. அவை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 170.00க்கும், அதிகபட்சமாக ரூ. 183.55க்கும் விற்பனையாகின.

இரண்டாம் தரக் கொப்பரைகள் 2,739 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தன. அவை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 36.99க்கும், அதிகபட்சமாக ரூ. 180.19க்கும் விற்பனையாகின. மொத்தம் 2 லட்சத்து 15 ஆயிரம் கிலோ எடையிலான கொப்பரைகள் விற்பனையாகின.இவற்றின் மொத்த விற்பனை மதிப்பு ரூ. 3 கோடியே 59 லட்சம் ஆகும் என விற்பனைக் கூடக் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## சட்டவிரோத மது விற்பனை: இருவர் கைது

**ஈரோடு, ஏப். 28 -**

சட்டவிரோத மது விற்பனையை தடுக்க மாவட்ட போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.அதனடிப்படையில், திங்களூர் நேற்று தங்களது காவல் எல்லைக்குட்பட்ட செல்லப்பம்பாளையம், மயானத்தின் அருகில், அரசு மதுபாட்டில்களை சட்டவிரோதமாக பதுக்கி வைத்து விற்பனை செய்து வந்த திங்களூர், அம்மன் நகரை சேர்ந்த பழனிசாமி (49) என்பவர் மீது வழக்குப் பதிவு செய்து, கைது செய்தனர். அவரிடமிருந்து 6 மது பாட்டில்களையும் பறிமுதல் செய்தனர். அதேபோல, வரப்பாளையம் போலீசார், தங்களது காவல் எல்லைக்குட்பட்ட மேட்டுக்கடை பார்க் நகர், தண்ணீர் தொட்டி அருகில் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்டிருந்த ராம நாதபுரம் மாவட்டம், திருவாடனையை அடுத்துள்ள புளியல் பகுதியை சேர்ந்த கார்த்திக் (32) என்பவர் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். அவரிடமிருந்த 10 மது பாட்டில்களையும் பறிமுதல் செய்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# அழகர்கோவில், கள்ளழகர் திருக்கோயில் பக்தர்களின் வசதிக்காக 4 புதிய சிற்றுந்துகள்: அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, பி.மூர்த்தி தொடங்கி வைத்தனர்



**சென்னை,ஏப்.28**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நல்வழிகாட்டுதலின்படி, (27.04.2025) வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் மதுரை மாவட்டம், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் ரூ. 1.20 கோடி செலவில் வாங்கப்பட்ட 4 புதிய சிற்றுந்துகளை பக்தர்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தனர். மேலும் மதுரை சித்திரைப் பெருவிழா 2025-ஐ முன்னிட்டு அழகர்கோவிலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளையும் ஆய்வு செய்தனர்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், இந்து சமய அறநிலையத் துறை தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி அனைவரும் பாராட்டுகின்ற வகையில் செயல்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 2023 – 2024 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில், "அழகர்கோவில் முதல் சோலைமலை வரை பக்தர்கள் சென்று திரும்புவதற்கு வசதியாக நான்கு புதிய சிற்றுந்துகள் வாங்கப்படும் " என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.1.20 கோடி செலவில் வாங்கப்பட்ட 4 புதிய சிற்றுந்துகள் இன்று பக்தர்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டன. இந்த சிற்றுந்துகளில் அழகர்கோவில் முதல் சோலைமலை செல்வதற்கான கட்டணமாக ரூ. 10 /- நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சென்னிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், துறையூர் அருள்மிகு வெங்கடாஜலபதி திருக்கோயில் ஆகிய திருக்கோயிலிலும் பக்தர்கள் பயன்பாட்டிற்காக பேருந்துகள் கொள்முதல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.மேலும் மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான அருள்மிகு கள்ளழகர் பச்சைப் பட்டு உடுத்தி வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் தொடர்பாக திருக்கோயில் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, விழாவினை சிறப்பாக நடத்துவதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் சி. மாரியப்பன், கே. செல்லதுரை, திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் ந. யக்ஞநாராயணன், மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் திருக்கோயில் அறங்காவலர்கள் மீனா அன்புநிதி, சுப்புலட்சுமி, அழகர்கோவில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில் அறங்காவலர்கள் மீனாட்சி பாண்டியராஜன், ரவிக்குமார், செந்தில்குமார், திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அறங்காவலர் சண்முகசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வியாசர்பாடி பகுதியில் தங்கச்சங்கிலி பறித்த வாலிபர் கைது

**சென்னை ஏப் 28-**

சென்னை, வியாசர்பாடி, பி கல்யாணபுரம், 4வது தெருவில் வசித்து வரும் பவினா, என்பவரின் மகன் கடந்த 25.ந் தேதி அன்று மாலை, கால்பந்து பயிற்சி முடித்து தனது வீட்டிற்கு செல்வதற்காக, வியாசர்பாடி,'பி' கல்யாணபுரம், 2வது குறுக்குத் தெருவில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு நின்றிருந்த தெரிந்த நபரான விக்னேஷ் (எ) விக்கி என்பவர் பவினாவின் மகனை வழிமறித்து மது அருந்த பணம் கேட்டுள்ளார்.

**வாலிபர் கைது**

பவினாவின் மகன் பணம் இல்லை என்று கூறியபோது, விக்னேஷ் அந்த நபரை கையால் தாக்கி, அவர் அணிந்திருந்த 1 சவரன் தங்கசெயினை பறித்தபோது, அந்த நபர் தங்கச்சங்கிலியை பிடித்துக் கொண்டபோது தங்கச்சங்கிலி பாதியாக அறுந்தபோது, விக்னேஷ் அறுந்த தங்கச்சங்கிலியுடன் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

இது குறித்து பவினா, வியாசர்பாடி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். வியாசர்பாடி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி சங்கிலி பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட விக்னேஷ் (எ) விக்கி, என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து புகார்தாரரின் மகனிடம் இருந்து பறித்துச் சென்ற சுமார் 3.63 கிராம் எடையுள்ள அறுந்த தங்கச்சங்கிலி மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி விக்னேஷ் மீது ஏற்கனவே 1 குற்ற வழக்கு உள்ளது தெரியவந்தது.கைது செய்யப்பட்ட எதிரி விக்னேஷ் (எ) விக்கி, விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# வேப்பேரி பகுதியில் ஆட்டோ ஓட்டுநரிடமிருந்து செல்போன் பறிப்பு: ஒருவர் கைது

**சென்னை ஏப் 28-**

சென்னை, தண்டையார்பேட்டையில் வசித்து வரும் பாலமுருகன், என்பவர் ஆட்டோ ஓட்டி வருகிறார். பாலமுருகன் நேற்று முன்தினம் அதிகாலை சவாரி முடித்துவிட்டு, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, அவதான பாப்பையர் ரோடு சந்திப்பில் ஆட்டோவில் அமர்ந்து டீ குடித்துக் கொண்டு இருந்தபோது, அங்கு வந்த ஒரு வாலிபர் சவாரி கேட்பது போல நடித்து, பாலமுருகன் கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு, தப்பிச் சென்றபோது, பாலமுருகன் சத்தம்போடவே, பொதுமக்கள் உதவியுடன் மேற்படி செல்போன் பறிப்பு வாலிபரை மடக்கிபிடித்து வேப்பேரி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் ஒப்படைத்து, புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

வேப்பேரி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், மேற்படி பிடிபட்ட நபரிடம் விசாரணை செய்ததில் பிடிபட்ட நபர் சந்தோஷ் சண்முகம், என்பதும் மேற்படி ஆட்டோ ஓட்டுநரிடமிருந்து செல்போன் பறித்துச் சென்றபோது பிடிபட்டதும் தெரியவந்தது.அதன்பேரில் வேப்பேரி காவல் நிலைய குற்றப்பிரிவில் வழக்குப் பதிவு செய்து, எதிரி சந்தோஷ் சண்முகம் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து ஆட்டோ ஓட்டுநரின் செல்போன் மீட்கப்பட்டது.கைது செய்யப்பட்ட எதிரி சந்தோஷ் சண்முகம் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

# கிண்டியில் தங்க நகைகள் மற்றும் பணத்தை திருடியவர் கைது

**சென்னை ஏப் 28-**

சென்னை, கிண்டி, லேபர் காலனி முதல் தெருவில் சைனி ஆன்டிரியா, என்பவர் தனது குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். இவர் கடந்த 10ந் தேதிப் அன்று மேற்படி தனது வீட்டை பூட்டிவிட்டு வெளியே சென்று பின்னர் மாலை வீட்டுக்கு வந்து பார்த்தபோது, யாரோ வீட்டின் பின்பக்க கிரில் கேட் பூட்டை உடைத்து வீட்டினுள் நுழைந்து பீரோவில் வைத்திருந்த சுமார் 17 சவரன் தங்கநகைகள் மற்றும் பணம் ரூ.3,92,000/- ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளது தெரியவந்தது

போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.கிண்டி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட செந்தில்முருகன், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்படி வீட்டில் திருடிய 11 ¼ சவரன் எடையுள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டது.விசாரணையில் எதிரி செந்தில்முருகன் அவரது கூட்டாளி செல்வமணி என்பவருடன் சேர்ந்து மேற்படி புகார்தாரர் வீட்டில் தங்க நகைகள் மற்றும் பணத்தை திருடியது தெரியவந்தது. மேலும் விசாரணையில், எதிரி செந்தில்முருகன் மீது ஏற்கனவே சுமார் 12 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.



வடசென்னை மாவட்டம், பெரம்பூர் தொகுதி சத்திய மூர்த்தி நகரில் அதிமுகவின் திண்ணை பிரசாரம் நடைபெற்றது.இதை தொடங்கி வைத்த எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஆர். பி.உதயகுமார்,அப்பகுதிமக்கள்தந்தகோரிக்கைகள்அடங்கியமனுக்களைபெற்றுக்கொண்டார் அருகில் வடசென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்எஸ்.ராஜேஷ், மாநில ஜெ பேரவை துணை செயலாளர் பொன்ராஜ், இணை செயலாளர் நேதாஜி கணேசன், ஆகியோர் உள்ளனர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, 150வது வார்டு காரம்பாக்கம் அரசு உயர் நிலைப் பள்ளியில் சென்னை கிரவுன் அரிமா சங்கம் சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை, மெடால் டயாக்னாஸ்டிக்ஸ் இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் கண்டறிதல் மருத்துவ முகாமை காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ துவக்கி வைத்தார்.

# மடிப்பாக்கம் பகுதியில் மெத்தபெட்டமைன் போதைப்பொருள் விற்ற இருவர் கைது

**. சென்னை ஏப் 28-**

போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு தனிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படையினர் மற்றும் மடிப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் மடிப்பாக்கம், கூட்ரோட்டில் கண்காணித்து, அங்கு சந்தேகப்படும்படி நின்றிருந்த 2 நபர்களை விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் மெத்தபெட்டமைன் என்ற போதைப்பொருளை மறைத்து வைத்திருந்தது தெரியவந்ததுஅதன்பேரில், மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, சட்டவிரோதமாக மெத்தபெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த 1.ரஞ்சித்குமார், 2.விக்னேஷ்வரன், வ/ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 7 கிராம் மெத்தபெட்டமைன் மற்றும் 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் எதிரி ரஞ்சித்குமார் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருவதும், விக்னேஷ்வரன் தனியார் பொறியியல் கல்லூரியில் படித்து வருவதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை**
**நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை**

# தம்பிக்கு கத்தி குத்து: அண்ணன் கைது

**சென்னை ஏப் 28-**

சென்னை, புளியந்தோப்பு, சிவராஜபுரம் 3வது தெருவில் வசித்து வரும் பார்த்திபன், அவரது மனைவியை பிரிந்து வசித்து வருகிறார்.

**அண்ணன் கைது**

பார்த்திபனுக்கும் அதே வீட்டில் வசிக்கும் அவரது அண்ணன் கண்ணன் என்பவருக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு, இந்நிலையில், 24.ந் தேதி அன்று இரவு பார்த்திபனுக்கும், அவரது அண்ணன் கண்ணனுக்கும் வாய் தகராறு ஏற்பட்டபோது, கண்ணன் கத்திரிக்கோலால் பார்த்திபனை தாக்கிவிட்டு தப்பிச் சென்றார். இரத்தக்காயமடைந்த பார்த்திபன் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வரும் நிலையில், மேற்படி சம்பவம் குறித்து பார்த்திபனின் மனைவி லாவண்யா என்பவர் கொடுத்த புகாரின் மீது, பேசின் பாலம் காவல் நிலையத்தில் கொலை முயற்சி உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பே சின் பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி கண்ணன்,என்பவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட எதிரி கண்ணன் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.

## 45-வது லீக் - லக்னோவை வீழ்த்தி
# தொடர்ச்சியாக மும்பை 5-வது வெற்றி



**மும்பை, ஏப்.28-**

பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் லக்னோவுக்கு எதிரான போட்டியில் மும்பை அணி 54 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**ரிக்கெல்டன் அரைசதம்...**

நடப்பு பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரின் புள்ளிப்பட்டியலில் தலா 10 புள்ளிகளுடன் பட்டியலில் 5 மற்றும் 6வது இடங்களில் இருக்கும் மும்பை, லக்னோ அணிகள் நேற்று பலப்பரீட்சை நடத்தின. வான்கடே மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் டாஸ் வென்ற லக்னோ அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, களமிறங்கிய மும்பை அணிக்கு ரோகித் ஷர்மா மற்றும் ரிக்கெல்டன் ஆகியோர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். முதல் இரண்டு பந்துகளை சிக்சர்கள் விளாசிய ரோகித் ஷர்மா, 6 பந்துகளில் 12 ரன்கள் அடித்து அவுட்டானார். தொடர்ந்து, மறுமுனையில் அபாரமாக ஆடிய ரிக்கெல்டன் 25 பந்துகளில் அரைசதம் அடித்தார். 32 பந்துகளில் 58 ரன்களில் அவுட்டானார்.

**அதிவேக சூர்யகுமார்...**

வில் ஜேக்ஸ், சூர்யகுமார் யாதவ் ஜோடி மளமளவென ரன்களை குவித்தது. ஜேக்ஸ் (29) ஆட்டமிழந்தாலும், சூர்யகுமார் யாதவ் தன்னுடைய அதிரடியை நிறுத்தவில்லை. 35 ரன்களில் இருந்த போது, சிக்ஸ் அடித்த சூர்யகுமார் யாதவ், பிரீமியர் லீக் தொடரில் அதிவேகமாக 4,000 ரன்களை கடந்த மூன்றாவது வீரர் என்ற சாதனையை படைத்தார். இவர், 2,714 பந்துகளில் இந்த சாதனையை படைத்தார். கெயில் (2,653), டிவில்லியர்ஸ் (2,658) முதல் இரு இடங்களில் உள்ளனர். 28 பந்துகளில் 54 ரன்கள் குவித்த போது அவர் அவுட்டானார். தொடர்ந்து, நமன் தீர் (25 நாட் அவுட்), கோர்பின் போஸ் (20) ஆகியோரின் பங்களிப்பினால், மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 215 ரன்கள் குவித்தது. மயங்க் யாதவ், ஆவேஷ் கான் தலா 2 விக்கெட்டுகளும், பிரின்ஸ் யாதவ், திக்வேஷ், ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

**தொடர் வெற்றி...**

தொடர்ந்து விளையாடிய லக்னோ அணி 20 ஓவர்கள் முடிவில் 161 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. இதன்மூலம், 54 ரன்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வெற்றி பெற்றது. 10 போட்டிகளில் விளையாடியுள்ள மும்பை அணி 6வது வெற்றியை பதிவு செய்துள்ளது. 4 போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வியை சந்தித்த மும்பை அணி, கடைசியாக விளையாடிய 5 போட்டிகளில் தொடர்ந்து வெற்றி பெற்றுள்ளது. மும்பை அணி சார்பில் பும்ரா 4 விக்கெட்டுகளும், போல்ட் 3 விக்கெட்டுகளும், வில் ஜேக்ஸ் ஒரு விக்கெட்டும், போஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்

## மகளிர் முத்தரப்பு கிரிக்கெட்:
# இலங்கையை வீழ்த்தியது இந்தியா

**கொழும்பு, ஏப்.28-**

இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டியில் இந்திய மகளிரணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

**இந்தியா-இலங்கை மோதல்...**

ஐசிசி மகளிர் ஒருநாள் உலகக் கோப்பை 50 ஓவர்கள் போட்டி இந்தியாவில் இந்தாண்டு பிற்பகுதியில் நடைபெறவுள்ளது. அதற்கு அனைத்து அணிகளும் தயாராகி வருகின்றன. இதையொட்டி இந்தியா, இலங்கை, தென்னாப்பிரிக்க மகளிர் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு ஒருநாள் தொடர் கொழும்பு பிரேமதாச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று தொடங்கியது. இதன் முதல் ஆட்டத்தில் இந்திய-இலங்கை அணிகள் மோதின.

**ஓவர்கள் குறைப்பு...**

மழையின் காரணமாக போட்டி 39 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இந்தியா பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இலங்கை அணி 38.1 ஓவர்களில் 137 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. அதிகபட்சமாக ஹாசினி ஃபேரேரா 30 ரன்கள் எடுத்தார். இந்தியா சார்பில் ஸ்நேஹ ராணா 3 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார். இவருடன் தீப்தி சர்மா, நல்லபு ரெட்டி சரணி தலா 2 விக்கெட்டுகளும் எடுத்தார்கள்.

**இந்தியா வெற்றி...**

138 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இந்திய மகளிர் அணி, 29.4 ஓவர்களில் 149/1 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக பிரதிகா ராவல் 50*, ஸ்மிருதி மந்தனா 43, ஹர்லீன் தியோல் 48* ரன்களும் எடுத்தார்கள். பிரதிகா ராவல் ஆட்ட நாயகியாக தேர்வு செய்யப்பட்டார். இந்தியா அடுத்த போட்டியில் தென்னாப்பிரிக்காவுடன் ஏப்.29ஆம் தேதி எதிர்கொள்கிறது. ஒவ்வொரு அணியும் தலா 4 போட்டிகளில் விளையாடுகின்றன. அதில் டாப் 2 அணிகள் இறுதிப் போட்டியில் மோதும். அதில் வெற்றி பெறும் அணியே முத்தரப்பு தொடரில் வென்றதாக அறிவிக்கப்படும்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# 300 சிக்ஸர்கள்: புதிய சாதனையை நிகழ்த்த தவறினார் ரோகித் சர்மா..!

**மும்பை, ஏப்.28-**

லக்னோவுக்கு எதிரான போட்டியில் வரலாற்றில் 300 சிக்ஸர்கள் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையை ரோகித் சர்மா தவறவிட்டார்.

**300 சிக்ஸர்கள்...**

வான்கடே திடலில் நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ பந்துவீச்சைத் தேர்வு செய்தது. இந்தப் போட்டியில் ரோகித் சர்மா 5 சிக்ஸர்கள் அடித்தால் ஐ.பி.எல். வரலாற்றில் 300 சிக்ஸர்கள் அடித்த முதல் இந்திய வீரர் என்ற சாதனைய நிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

**ஆட்டமிழப்பு...**

மயங்க் யாதவ் வீசிய ஓவரில் தொடர்ச்சியாக 2 பந்துகளில் 2 சிக்ஸர்கள் அடித்த ரோகித் சர்மா அடுத்த இரண்டு பந்துகளில் ரன்கள் எடுக்காமல் டாட் செய்தார். 5ஆவது பந்தில் மெதுவாக வீசப்பட்ட பந்தில் ஆட்டமிழந்தார். 5 சிக்ஸர்கள் தேவைப்பட்ட போது 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழந்து சாதனையை தவறவிட்டார்.

ஐ.பி.எல். வரலாற்றில் அதிக சிக்ஸர்கள் பட்டியலில் கிறிஸ் கெயில் 357 சிக்ஸர்களுடன் முதலிடத்தில் இருக்கிறார். ரோகித் இரண்டாம் இடத்தில் இருக்கிறார்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | குஜராத் | 8 | 6 | 2 | 12 | +1.104 |
| 2 | மும்பை | 10 | 6 | 4 | 12 | +0.889 |
| 3 | டெல்லி | 8 | 6 | 2 | 12 | +0.657 |
| 4 | பெங்களூரு | 9 | 6 | 3 | 12 | +0.482 |
| 5 | பஞ்சாப் | 9 | 5 | 3 | 11 | +0.177 |
| 6 | லக்னோ | 10 | 5 | 5 | 10 | -0.325 |
| 7 | கொல்கத்தா | 8 | 3 | 5 | 6 | +0.212 |
| 8 | ஐதராபாத் | 9 | 3 | 6 | 6 | -1.103 |
| 9 | ராஜஸ்தான் | 9 | 2 | 7 | 4 | -0.625 |
| 10 | சென்னை | 9 | 2 | 7 | 4 | -1.302 |

## இன்றைய ஐ.பி.எல் (47-வது லீக்)



**அணிகள் - ராஜஸ்தான் vs குஜராத்**
**இடம் - ஜெய்ப்பூர் மணி - இரவு 7.30**

## மனதின் குரல் நிகழ்ச்சியில்
# பிரதமர் மோடி குறிப்பிட்ட 'சசேத்' மொபைல் செயலியின் சிறப்புகள்

**சென்னை, ஏப். 28-**

பிரதமர் நரேந்திர மோடி, 'மனதின் குரல்' நிகழ்ச்சியின் 121-வது அத்தியாயத்தை முன்னிட்டு நாட்டு மக்களிடம் உரையாற்றினார். அப்போது 'சசேத்' என்ற மொபைல் செயலி குறித்து குறிப்பிட்டிருந்தார்.

"நண்பர்களே, இந்தச் செயலியானது நீங்கள் எந்தவொரு இயற்கைப் பேரிடரிலும் சிக்காதவாறு காப்பாற்றுகிறது. இதன் பெயரும் கூட சசேத். சசேத் செயலியை, இந்தியாவின் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் உருவாக்கியிருக்கிறது. வெள்ளம், சூறாவளி, நிலச்சரிவு, ஆழிப்பேரலை, காட்டுத்தீ, பனிச்சரிவு, புயல், புழுதிக்காற்று அல்லது மின்னல் தாக்குதல் போன்ற பேரிடர்கள் ஏற்படும் வேளையில், இந்த சசேத் செயலி உங்களுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் அளித்து, பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது.

இந்தச் செயலியால் நீங்கள் வானிலை ஆய்வுத் துறைசார் அண்மைத் தகவல்களைப் பெறலாம். குறிப்பாக, இந்த சசேத் செயலி, மாநில மொழிகளிலும் கூட பல தகவல்களை அளிக்கிறது. இந்தச் செயலியால் நீங்களும் பயனடையுங்கள், உங்கள் அனுபவங்களைக் கண்டிப்பாகப் பகிர்ந்து கொள்ளுங்கள்" என பிரதமர் மோடி கூறியிருந்தார்.

சசேத் செயலி பேரிடர் பாதிப்பு குறித்த முன்னறிவிப்புகளை இந்த செயலி வழங்கும். இந்த தகவல் அரசு தரப்பில் வழங்கப்படுகிறது. இதோடு வானிலை சார்ந்த அறிவிப்புகளை இந்திய வானிலை மையத்தின் துணையோடு இந்த செயலியில் பயனர்கள் பெற முடியும். தமிழ் உட்பட 12 மொழிகளில் இந்த செயலியை பயன்படுத்த முடியும். (தமிழில் நாம் பயன்படுத்தி பார்த்தபோது அது அப்படியே ஆங்கிலத்தில் இருந்து நேராக இணையம் மூலம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது போல இருந்தது. ஹோம் பேஜ் என்பது தமிழ் 'வீடு' என குறிப்பிடப்பட்டுள்ளது. அது முகப்பு என்று இருக்க வேண்டும்). இதில் அவசர கால உதவி எண்களும் வழங்கப்பட்டுள்ளன.

# பா.ஜ.க., பா.ம.க. இருக்கும் அணியில் வி.சி.க. ஒருபோதும் இடம்பெறாது
## திருமாவளவன் திட்டவட்டம்

**புதுச்சேரி, ஏப்.28-**

பா.ஜ.க.வும், பா.ம.க.வும் இருக்கும் அணியில் வி.சி.க. இடம்பெறாது என்று அதன் தலைவர் தொல் திருமாளவளவன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி திருபுவனையில் புதிதாக அமைக்கப்பட்ட அம்பேத்கரின் முழு உருவ சிலை திறப்பு நிகழ்வு நடந்தது. விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் சிலையை திறந்து வைத்து கட்சியில் பல்வேறு நிலைகளில் பணியாற்றியோருக்கு விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்கி கவுரவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், "தமிழகத்தின் வேங்கை வயல், கள்ளக்குறிச்சி மேல் பாதி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்காக தி.மு.க. அரசின் காவல் துறையை கண்டித்து பல போராட்டங்களை நடத்தி உள்ளோம். இதற்கெல்லாம் அ.தி.மு.க. போராட்டங்களை நடத்த வேண்டியது தானே?

தி.மு.க.வோடு நாம் தொடர்ந்து பயணிக்கிறோம் என்பதையே பலர் கேலி பேசுகிறார்கள். நான் கூட்டணிக்காக எல்லா கதவுகளையும் திறந்து வைத்திருக்கவில்லை. பா.ஜ.க.-அதி.மு.க.வோடும் தேவைப்பட்டால் மற்ற கட்சிகளோடும் கூட்டணிக்காக ஒரே நேரத்தில் 2 அணியிலும் பேசும் ராஜதந்திரம் நமக்குத் தெரியாது.

பா.ஜ.க.வும், பா.ம.க.வும் இருக்கும் அணியில் ஒருபோதும் விடுதலைக் சிறுத்தைகள் கட்சி இடம்பெறாது. புதிதாக கட்சி தொடங்கி இருக்கிற நடிகர் விஜய் கூட புத்தக வெளியீட்டு விழாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். விழாவுக்குச் செல்வதன் மூலம், ஒரு தவறான யூகத்தை கொடுத்து விடக்கூடாது, ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விடக்கூடாது, அதன் மூலம் நாம் இருக்கிற அணி பலவீனப்பட்டால் பா.ஜ.க.வுக்கு சாதகமாக அரசியல் சூழல் மாறிவிடும் என்பதையெல்லாம் யூகித்து அந்த விழாவையே புறக்கணித்தேன்.

எனக்காக திறந்து வைக்கப்பட்டிருந்த அ.தி.மு.க. கதவை மூடியது போன்று விஜய் திறந்து வைத்திருந்த கதவையும் மூடினேன். ஆட்சியில் பங்கு, துணை முதல்வர் பதவி என ஆசை வார்த்தைகளால் என்னை வீழ்த்தி விட முடியாது. அரசியலில் நான் எடுக்கிற ஒவ்வொரு முடிவும் அம்பேத்கரின் கருத்துக்களை மனதில் வைத்து எடுக்கும் முடிவுகள் தான்" என்று தெரிவித்தார்.

# தமிழ்நாட்டின் ஆழ்கடல் பகுதியில் எண்ணெய் எரிவாயு எடுக்க அனுமதி

**புதுடில்லி, ஏப். 28-**

தமிழ்நாட்டின் ஆழ்கடல் பகுதியில் எண்ணெய் எரிவாயு எடுக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 4 வட்டாரங்கள் உட்பட இந்தியாவில் 28 வட்டாரங்களில் எண்ணெய் எரிவாயு எடுக்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில், கன்னியாகுமரிக்கு அருகே ஆழ்கடலில் 3 இடங்களிலும், சென்னைக்கு அருகே 1 இடத்திலும் எரிவாயு எடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது

# 500 போட்டியில் களமிறங்கிய முல்லர்



ஜெர்மனி ஜெயண்ட்ஸ் எனப்படும் பெயர்ன் மியூனிக் அணிக்காக 35 வயதாகும் தாமஸ் முல்லர் புன்டஸ்லீகா தொடரில் 500 போட்டிகளில் விளையாடியுள்ளார். தாமஸ் முல்லர் ஆகஸ்ட் 15, 2008ஆம் ஆண்டு பெயர் மியூனிக் அணிக்காக அறிமுகமாகி 25 ஆண்டுகளாக விளையாடிவரும் இவர் இந்த சீசனோடு அணியை விட்டுப் பிரிகிறார். அறிமுகமானதிலிருந்து 6,101 நாள்களுக்குப் பிறகு புன்டஸ்லீகா தொடரில் ஒரே அணிக்காக 500-ஆவது முறையாக விளையாடி சாதனை படைத்துள்ளார்.

ஏற்கனவே, பெயர் மியூனிக் அணிக்காக ஒருவர் அதிகமான போட்டிகளில் (748) விளையாடியதில் இவர்தான் முதலிடத்தில் இருக்கிறார். கடந்த 2,000ஆம் ஆண்டில் இந்த அணியில் சேர்ந்த தாமஸ் முல்லர் அட்டாகிங் மிட்ஃபீல்டர், செகண்ட் ஸ்டிரைக்கராக விளையாடி வந்தார். இவரது பங்களிப்பில் 12 முறை புன்டெஸ்லீகா தொடரினையும் 2 முறை சாம்பியன்ஸ் லீக்கையும் 6 டிஎஃப்எக்ஸ் பட்டங்களையும் வென்றுள்ளார்.

தொடர்ச்சியாக 11 முறை புன்டெஸ்லீகா தொடரினை வென்றதில் இவர் முக்கிய பங்காற்றியுள்ளார். இந்தத் தொடரில் தனது 500-ஆவது போட்டியில் பங்கேற்றதுக்கு பலரும் வாழ்த்து தெரிவித்து வருகிறார்கள். இந்தப் போட்டியில் பெயர் மியூனிக் 3-0 அபார வெற்றிப் பெற்றது. 75 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும் பெயர்ன் மியூனிக் இந்தாண்டும் கோப்பையை கைப்பற்றுவதில் உறுதியாக இருக்கிறது.



சென்னையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கூடுதல் தலைமைச்செயலாளரும், தலைவரும், மேலாண்மை இயக்குநருமான ஜெ.ராதாகிருஷ்ணன் மனைவியுடன் சந்தித்து தனது மகன் மருத்துவர் அரவிந்த் அகில இந்திய குடிமைப்பணி தேர்வில் இந்திய அளவில் 80-வது இடத்தை பெற்று தேர்ச்சி பெற்றதையொட்டி வாழ்த்து பெற்றார். அருகில் துர்கா ஸ்டாலின் உள்ளார்.

# த.வெ.க. ஆட்சி சிறுவாணி நதி போல சுத்தமாக இருக்கும்
## கோவையில் விஜய் பரபரப்பு பேச்சு



**கோவை, ஏப்.28-**

த.வெ.க. ஆட்சி சிறுவாணி நதி போல சுத்தமாக இருக்கும் என்று கோவையில் நடந்த வாக்குச்சாவடி முகவர்கள் கருத்தரங்கில் விஜய் பேசினார்.

கோவையில் தமிழக வெற்றிக் கழகத்தின் வாக்குச்சாவடி முகவர்கள் கருத்தரங்கம் 2வது நாளாக நேற்று நடைபெற்றது.

இதில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்றுப் பேசியதாவது,

நேற்று (நேற்று முன்தினம்) பேசும்போது இந்த சந்திப்பு ஓட்டுக்காக அல்ல என்று உங்களிடம் (மக்களிடம்) கூறினேன். தெளிவான உண்மையான வெளிப்படையான கட்சி தமிழக வெற்றிக் கழகம். சிறுவாணி நீர் போல தமிழக வெற்றிக் கழகத்தின் ஆட்சி சுத்தமான ஆட்சியாக இருக்கும். ஊழல்வாதிகள், மோசடியாளர்கள் இருக்கமாட்டார்கள்.

சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை; மக்களின் நலனுக்காக எந்த எல்லைக்கும் செல்லத் தயார். வெற்றியை அடைவதற்கு உங்கள் செயல்பாடுகள் முக்கியம்; நீங்கள் தான் முதுகெலும்பு. மக்களுடன் வாழ், மக்களிடம் செல், மக்களுடன் சேர்ந்து திட்டமிடு, மக்களை நேசி, மக்களுக்காக சேவை செய் என்கிற அறிஞர் அண்ணாவின் வார்த்தைகளை மனதில் வைத்து பூத் கமிட்டி உறுப்பினர்கள் செயல்பட வேண்டும்.

வாக்கு செலுத்தும் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது நமது கடமை. நமக்காக வாக்களிக்கும் மக்கள் ஓட்டு செலுத்துவதை கொண்டாடமாகச் செய்ய வேண்டும். அந்த மனநிலையை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். அப்போது, புரியும், த.வெ.க. வெறும் அரசியல் கட்சி மட்டுமல்ல என்று. இதை மனதில் வைத்து செயல்படுங்கள். நம்பிக்கையோடு இருங்கள்; வெற்றி நிச்சயம் என விஜய் பேசினார்.

## கப்பல் எதிர்ப்பு ஏவுகணை
# சோதனையை வெற்றிகரமாக நடத்தியது இந்திய கடற்படை



**புதுடெல்லி, ஏப்.28-**

இந்திய கடற்படை போர்க்கப்பல்கள் சமீபத்தில் வெற்றிகரமாக பல கப்பல் எதிர்ப்பு ஏவுகணைச் சோதனைகளை நடத்தியதாக கடற்படையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கடற்படை செய்தித்தொடர்பாளர் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இந்திய கடற்படை கப்பல்கள் நீண்ட தூர தாக்குதல், தாக்குதல்களுக்கான தளங்கள், அமைப்புகள் மற்றும் துருப்புகளுக்கான தயார் நிலையை மறுபரிசீலனை செய்து நிரூபிக்கும் வகையில், பல்வேறு சோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. எந்த இடத்திலும், எந்த நேரத்திலும், எந்த வகையிலும் நாட்டின் கடல்சார் நலன்களை பாதுகாப்பதில் இந்திய கடற்படை நம்பகத்தன்மையுடன், அக்கறையுடன் தயார் நிலையில் உள்ளது" என்று தெரிவிள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஏப்.22-ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் சுற்றுலாப்பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட நிலையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்தப் பின்னணியில் இந்த போர்க்கப்பல் எதிர்ப்புச் சோதனை நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இந்திய கடற்படையின் போர்க்கப்பலான ஐ.என்.எஸ். சூரத், தரையிலிருந்து வான் இலக்கை தாக்கும் நடுத்தர ரக ஏவுகணைச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இது அரபிக்கடலின் வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பாகும். அரபிக் கடலில், பாகிஸ்தான் நடத்த திட்டமிட்டிருந்த தரையிலிருந்து தரைக்கு தாக்கும் சோதனைக்கு முன்பாக இந்தியா தனது சோதனைத் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்திய கப்பற்படையின் சமீபத்திய உள்நாட்டில் உருவாக்கப்பட்ட ஏவுகணை எதிர்ப்பு கப்பலான ஐ.என்.எஸ். சூரத்-ன், நகரும் கடல்கள் இலக்குகளை துல்லியமாக தாக்கும் சோதனை வெற்றி, நமது பாதுகாப்பு திறனை வலுப்படுத்துவதின் மற்றொரு மைல் கல்லைக் குறிக்கிறது என்று கடற்படை எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

# தயாளு அம்மாள் மருத்துவமனையில் அனுமதி

**சென்னை, ஏப்.28-**

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாள் உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் தயாளு அம்மாளுக்கு வயிற்று வலி, வாந்தி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் சிகிச்சைக்குப்பிறகு அவர் வீடு திரும்பியிருந்தார். இந்த நிலையில், தயாளு அம்மாளுக்கு மீண்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 28.04.2025 முதல் 04.05.2025 வரை**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்— கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் மகிழ்ச்சி மிக்க வாரம். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். நல்ல யோக பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தடையின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திசையை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான ஆடம்பரப் பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். புதிய, பழைய நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். மாணவர்கள் தினசரி தங்கள் பாடங்கள் அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும்.

பரணி --

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனையின் ஒத்துழைப்பால் மகிழ்ச்சி நிலவும். வீட்டில் உள்ளவர்களின் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்பட்டுக் கோயில், குளங்களுக்கு தேவையான பணத்தை நன்கொடையாக வழங்கி மகிழ்வீர்கள். பிரபலமானவர்களின் அருகாமையால் ஆறுதலும், நட்பால் முன்னேற்றம் கிடைக்கும். புத்தக வெளியீட்டுத் தொழில்களில் முன்னேற்றம் ஏற்படும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது.. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

ரோகிணி –

இந்த வாரம் உங்களுக்கு ஓரளவு பணவரவு இருக்கும். கோபத்தை அடக்கினால் குழப்பங்கள் குறையும். சகோதரர்களிடம் சண்டை புரியாமல் அனுசரித்து போவது நல்லது. மாணவர்கள் தேர்வுக்கு தீவிரமாக படித்துக் கல்வியில் தேர்ச்சி பெறுவர். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலர் பலவகையிலும் பிறரால் பாராட்டப்பட்டு உயர்வு அடைவர். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு கூடும், அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன் பிறப்புக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும்.

திருவாதிரை ---

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். பூஜா வழிபாடுகளால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். மதிப்பு மிக்க மனிதர்களின் நட்பால் அரசுப் பணியாளர்களின் ஆசைகள் நிறைவேறும். பெண்கள் தங்கள் செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்த முற்பட வேண்டும். மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழி முறைகளைக் கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். சிலரின் உடல் நலிவுறும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாததாகும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மக்கள் சேவையில் ஈடுபட்டதன் காரணமாக மக்களால் பாராட்டப்படுவீர்கள். குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். வியாபாரிகள் புதிய வியாபார நுணுக்கங்களை புகுத்தி ஆதாயம் காண்பர். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமை ஏற்படும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும்.

பூசம் --

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். எடுத்துக் கொண்ட புதிய திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்பப் போதுமான ஊதியம் இருக்காது.

ஆயில்யம் –

இந்த வாரம் சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்த படி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். சிறு தொழில் புரிபவர்களுக்கு தேவையான வங்கிக் கடன் உதவிகள் கிடைக்க தொழில் சிறக்கும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறன், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். செல்வாக்கு மிக்க நபர்கள் உதவியால் உங்கள் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். சிறு தொழில் புரிபவர்களுக்கு தேவையான வங்கிக் கடன் உதவிகள் கிடைக்க, தொழில் சிறக்கும்.

பூரம் –

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். எடுக்கும் முயற்சிகளில் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். சிலர், அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர். பணிபுரியும் பெண்களுக்கு அதிகாரிகள் கெடுபிடி காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு வேறு இடத்திற்கு அல்லது பணிக்கு மாற முற்படுவர். மாணவர்களுக்கு தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கேளிக்கை மற்றும் ஆடம்பர செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் புரிபவர்களுக்கு அரசு மற்றும் வங்கி மூலம் உதவிகள் கிடைத்து நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். பயணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்கு பெருமை சேர்க்க வேண்டும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளை செல்வம், துள்ளி விளையாடும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக லாபமும் அதிகரிக்கும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும்.

அஸ்தம் –

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். சினத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும்.

சுவாதி –

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும். புதிய வியாபார யுக்திகள் அதிக இலாபம் அடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலையும், மனோபயம் நிலவும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

அனுஷம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்காக வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தான் வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும்.

கேட்டை –

இந்த வாரம் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும்.. புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரியச் செய்திகள் வருவதோடு செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் ஏற்படும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும்.

பூராடம் –

இந்த வாரம் எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். சிலருக்கு உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

.உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் அதிகாரிகள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

திருவோணம்-

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும்.உங்களுக்குத் திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் அதிகாரிகள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர்.

சதயம்-

இந்த வாரம் புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறன் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். அதன் மூலம் வரும் இன்பம் நிலைத்திருக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் பொருளாதார நிலையும் சீராகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. அமையும்.

ரேவதி-

இந்த வாரம் மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். அரசு அதிகாரிகளால் சிலருக்குத் இடையூறுகள் ஏற்படலாம்.






● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று கோவையில் நடந்த அரசு விழாவில் ரூ.82.14 கோடி மதிப்பில் 132 புதிய திட்டபணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.239.41 கோடி மதிப்பில் 25 ஆயிரத்து 24 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

## கூட்டாட்சி இந்தியாவை...(1-ம் பக்க தொடர்ச்சி)

-சட்டபூர்வமான வாதங்களின் மூலமாக தமிழ்நாடு அரசு முன்வைத்து வாதாடியது. அந்த அறிவார்ந்த வாதங்களுக்குச் சொந்தக்காரர்களான வழக்கறிஞர்கள்தான் இன்றைக்கு நம்மோடு இருக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக, தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். சுப்ரீம் கோர்ட்டின் மூத்த வழக்கறிஞர் - முன்னாள் அட்டர்னி ஜெனரல் முகுல் ரோத்தகி அவர்களால் இந்த விழாவிற்கு வர இயலவில்லை. அவர் இங்கு இல்லையென்றாலும் தமிழ்நாடு அரசின் சார்பில் என்னுடைய பாராட்டுகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மக்களாட்சிக்கு வெற்றி

சுப்ரீம் கோர்ட்டின் மூத்த வழக்கறிஞர் - முன்னாள் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் - அபிஷேக் சிங்வி, ராகேஷ் திவேதி, சுப்ரீம் கோர்ட்டின் மூத்த வழக்கறிஞரும், மாநிலங்களவை உறுப்பினருமான வில்சன் ஆகியோரை தமிழ்நாடு அரசின் சார்பில் நான் பாராட்டுகிறேன். அறிவிற்சிறந்த வழக்கறிஞர் பெருமக்களே..... உங்களின் வாழ்க்கையில் எத்தனையோ பெரிய பெரிய வழக்குகளைப் பார்த்திருப்பீர்கள். வெற்றியும் பெற்றிருப்பீர்கள். தனிநபர்கள்-அமைப்புகள் ஏன், தனியொரு மாநிலம் கூட அந்த வழக்குகளில் வெற்றி பெற்றிருக்கும். ஆனால், இந்த வழக்கின் வெற்றி என்பது, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் அனைத்து மாநில மக்களுக்கும், மக்களாட்சிக்கும் கிடைத்திருக்கும் வெற்றி.

### மாநில சுயாட்சி....

இந்த மண்ணில் மக்களாட்சி இருக்கும் வரைக்கும், இந்த வழக்கும் வலுவான வாதங்களை வைத்த நீங்களும் பேசப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள். வழக்குத் தாக்கல் செய்த தமிழ்நாடும் - வாதிட்ட நீங்களும் - தீர்ப்பளித்த நீதியரசர்களும் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருப்போம் என்பது உறுதி. இந்த தீர்ப்பு கொடுத்திருக்கும் புத்துணர்ச்சி மற்றும் நம்பிக்கையோடுதான் மாநில சுயாட்சிக் குழுவை நாம் உருவாக்கியிருக்கிறோம். இந்திய ஜனநாயகத்தில் மக்களாட்சிக்கு வலுசேர்க்க, பேரறிஞர் அண்ணா வலியுறுத்தி, தலைவர் கலைஞர் முழக்கமாக வடித்து கொடுத்ததுதான் மாநிலத்தில் சுயாட்சி. மத்தியில் கூட்டாட்சி என்ற இலக்கு. அந்த இலக்கை வென்றெடுக்க இந்தத் தீர்ப்பு வழிகாட்டி இருக்கிறது. மாநில சுயாட்சியைப் பெறுவோம். கூட்டாட்சி இந்தியாவை நாம் உருவாக்குவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நீர்வளம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் கல்குவாரி, கிரஷர்கள், லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு கூடுதல் தலைமைச்செயலாளர் க.பணீந்திரரெட்டி, சுரங்கத்துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், சங்க உறுப்பினர்கள், புவியியல், சுரங்கத்துறையின் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.



● மதுரை மாவட்டத்தில் சித்திரை திருவிழா நடைபெறுவதை முன்னிட்டு முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தலைமையில் அலுவலர்களுடான ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் சங்கீதா, மாநகர காவல் ஆணையாளர் லோகநாதன் நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த், மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



● தமிழ்நாடு அரசின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை வளாகத்தில் அமைந்துள்ள 'வெள்ளுடை வேந்தர்' சர்.பிட்டி தியாகராயரின் 174-வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவ படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ., மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ் வளர்ச்சித்துறை செயலாளர் வே.ராஜாராமன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.



● சென்னையில் அ.தி.மு.க. அலுவலகத்தில் எதிர்க்கட்சி துணைத்தலைவரும், ஜெயலலிதா பேரவை மாநில செயலாளருமான ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நேற்று ஜெயலலிதா பேரவை மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி.சீனிவாசன், நத்தம் இரா.விஸ்வநாதன், ஓ.எஸ்.மணியன், கடம்பூர் ராஜூ, பா.வளர்மதி, வைகைச்செல்வன், முன்னாள் எம்.பி. ஜெயவர்தன் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்: செந்தில்பாலாஜி, பொன்முடி விடுவிப்பு

சென்னை, ஏப். 28-

தமிழக அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி ஆகிய இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். ராஜகண்ணப்பனுக்கு வனத்துறையும், சிவசங்கருக்கு மின்சாரத் துறையும் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி மற்றும் பொன்முடி ஆகிய இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். செந்தில்பாலாஜி நிர்வகித்து வந்த மின்சாரத் துறை, அமைச்சர் சிவசங்கருக்கு கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளது. வீட்டுவசதித் துறை அமைச்சர் முத்துசாமிக்கு மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பால்வளத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு கூடுதலாக வனத்துறையும் காதி துறையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத பணப் பரிமாற்ற வழக்கில் செந்தில் பாலாஜிக்கு அமைச்சர் பதவி வேண்டுமா? ஜாமீன் வேண்டுமா? என்று சுப்ரீம் கோர்ட் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், தமிழக அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜி விடுவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சமீபத்திய சர்ச்சை பேச்சால் பொன்முடிக்கு எதிராக பலரும் (திமுக எம்.பி. கனிமொழியும்) கண்டனம் தெரிவித்த நிலையில், அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கோரிக்கையும் எழுந்தது. இதனையடுத்து, அமைச்சர் பதவியிலிருந்து பொன்முடியும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சட்டப்பேரவை உறுப்பினரான மனோ தங்கராஜுக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது. எம்.எல்.ஏ. மனோ தங்கராஜையும் அமைச்சரவையில் சேர்க்க முதல்வர் ஸ்டாலின் கோரிக்கை விடுத்த நிலையில், கோரிக்கைக்கு ஆளுநர் ஆர்.என். ரவி ஒப்புதல் அளித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் லிச்சிப்பழம் சாகுபடி: பிரதமர் நரேந்திரமோடி பெருமிதம்

புதுடெல்லி, ஏப். 28-

தமிழ்நாட்டில் லிச்சிப்பழம் சாகுபடி செய்யப்படுவதாக, மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி வாயிலாக பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார்.

இதன்படி, ஏப்ரல் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையான நேற்று (ஏப். 27) நடைபெற்ற 121-வது மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசினார்.

நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்ததாவது, கடந்த மாதம், மியான்மரில் ஏற்பட்ட நிலநடுக்கம் பற்றிய பயங்கரமான படங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள், நிலநடுக்கத்தால் அங்கே மிகப்பெரிய அழிவு ஏற்பட்டிருக்கிறது, விமானப்படையின் விமானங்கள் தொடங்கி, கடற்படையின் கப்பல்கள் வரை மியான்மருக்கு உதவிகள் புரிவதற்கென்றே புறப்பட்டுச் சென்றன. நமது குழுவினர் கம்பளிகள், கூடாரங்கள், உறங்குவதற்கான பைகள், மருந்துகள், உணவுப் பொருள்கள், குடிநீர் போன்றவற்றோடு, மேலும் பல பொருள்களை அளித்தனர். நமது குழுவினருக்கு அந்த நாட்டு மக்களிடமிருந்து அதிக பாராட்டுக்களும் கிடைத்தன.

லிச்சிப் பழம் பீகார், மேற்கு வங்கம், ஜார்க்கண்டில்தான் விளையும் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால் லிச்சிப்பழ சாகுபடி, தற்போது தென்னிந்தியா மற்றும் ராஜஸ்தானிலும் பயிரிடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின் வீரஅரசு காஃபி பயிர் விவசாயம் செய்து வந்தார். அவர் கொடைக்கானலில் லிச்சி மரங்களை நட்டார். அவருடைய ஏழாண்டு கால உழைப்பிற்குப் பிறகு தற்போது, இந்த மரங்களால் மகசூல் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன.

லிச்சிப் பழங்களைப் பயிர் செய்வதில் இவருக்குக் கிடைத்த வெற்றியைப் பார்த்து, மற்ற விவசாயிகளும் உத்வேகம் அடைந்தார்கள். ராஜஸ்தானத்தைச் சேர்ந்த ஜிதேந்திர சிங் ராணாவத்தும் லிச்சிப் பழங்களைப் பயிர் செய்வதில் வெற்றி பெற்றிருக்கிறார்.

இந்த எடுத்துக்காட்டுகள் அனைத்தும் உத்வேகம் அளிக்க வல்லவை. நாம் புதியதாக ஒன்றைச் செய்யும் நோக்கத்தை மேற்கொண்டால், இடர்களைத் தாண்டியும் உறுதிப்பாட்டோடு நின்றால், சாத்தியமற்றதைக் கூட சாத்தியமாக்க முடியும் என்றார்.

# எம்-சாண்ட், ஜல்லி விலையை ரூ.1000 குறைந்து விற்க தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஏப்.28-

எம்-சாண்டு மணல், ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்படட விலையிலிருந்து ரூ.1000- குறைத்து விற்பனை செய்திட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

சென்னை, தலைமைச் செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.27) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில், கல்குவாரி, கிரஷர்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் ஏப்ரல் 25 தேதி மனுவில் தெரிவித்துள்ள கோரிக்கைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

இதன்படி, கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் எம்-சாண்டு பிசாண்டு மணல் மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000 குறைத்து விற்பனை செய்யப்படும் என சங்கத்தினரால் ஏற்கப்பட்டது.

மேலும், சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33 என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான அரசாணை ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும் என கூறப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே. பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ. சரவணவேல்ராஜ், கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.சின்னசாமி, சங்கத்தின் உறுப்பினர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இணை இயக்குநர்கள் பங்கேற்றனர்.

# விஜய் பேச்சு தி.மு.க.வின் வெற்றியை பாதிக்காது: அமைச்சர் கோவி.செழியன்

தஞ்சாவூர், ஏப்.28-

விஜய்யின் பேச்சு தி.மு.க.வின் வெற்றியைப் பாதிக்காது என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், நாச்சியார்கோவில் அருகே ஏனநல்லூர் கிராமத்தில் நகரப் பேருந்துச் சேவையை உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என உச்சநீதிமன்றம் தீர்ப்பு கூறிய நிலையில் துணை வேந்தர்கள் மாநாட்டினை கூட்டும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என்ற விவரம் புரிந்துகொண்ட துணை வேந்தர்கள், பதிவாளர்கள் ஊட்டியில் ஆளுநர் கூட்டிய மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஆளுநர் அழைக்கக் கூடாத இடத்திற்கு அழைக்கிறார், எனவே, போகக் கூடாத இடத்திற்கு போகக் கூடாது என அவர்கள் செல்லவில்லை என்றார்.

மீண்டும் தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி அமைக்கும். இரண்டாவது இடம் யார் என்பதில் தான் மற்ற அணிகளுக்கு போட்டி. அழைப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் தனித்து நின்று விஜய் புலம்புகிறார். தி.மு.க.வின் வெற்றியை விஜய்யின் பேச்சு பாதிக்காது. பாதிக்கிற சூழல் தமிழகத்தில் இல்லை எனத் தெரிவித்தார்.

# பஹல்காம் தாக்குதல் வழக்கு: என்.ஐ.ஏ. விசாரணை தொடக்கம்

புதுடெல்லி, ஏப்.28-

மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின் படி, பயங்கரவாதிகளால் 26 பேர் கொடூரமாக கொல்லப்பட்ட பஹல்காம் தாக்குதல் வழக்கை தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ.) எடுத்துக் கொள்கிறது.

இதுகுறித்து என்.ஐ.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய உள்துறை அமைச்சகத்தின் உத்தரவின் படி, கடந்த செவ்வாய்க்கிழமை (ஏப்.22) சுற்றுலாப்பயணிகள் உட்பட 26 பேர் கொல்லப்பட்ட பஹல்காம் வழக்கை தேசிய புலனாய்வு முகமை முறையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நடைமுறையைத் தொடங்கியுள்ளது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பஹல்காமில் இருந்து 5 கி.மீ. தள்ளியிருக்கும் பைரசன் புல்வெளியில் தாக்குதல் நடந்த இடத்தில் என்.ஐ.ஏ. குழுவினர் புதன்கிழமை முதல் முகாமிட்டு தாக்குதலுக்கான ஆதாரங்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

தேசிய புலனாய்வு முகமையின் ஐ.ஜி., டி.ஐ.ஜி., மற்றும் எஸ்.பி. மேற்பார்வையிலான குழு அமைதியான மற்றும் அழகிய பைசரன் புல்வெளியில் கண்கள் முன்னே தங்களின் அன்புக்குரியவர்களை இழந்த பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரிடம் விசாரணை நடத்தி வருக்கின்றன.

காஷ்மீரில் நடந்த கொடூரமான தாக்குதல் சம்பவங்களை ஒரு வரிசையில் ஒருங்கிணைக்க தாக்குதலை நேரில் பார்த்தவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதிகள் பற்றிய தகவல்களுக்காக உள்நுழையும், வெளியேறும் நுழைவாயில்களை என்.ஐ.ஏ. குழுவினர் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கி யுள்ள இந்தக்க கொடூர பயங்கராவத தாக்குதலுக்கு காரணமான சதியினை வெளிக்கொண்டு வருவதற்காக தடயவியல் மற்றும் பிற துறை நிபுணர்களின் உதவியுடன் என்.ஐ.ஏ. குழு தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.